தினபூமி
thinaboomi.com
சென்னை, செவ்வாய், மார்ச் 18, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00



## சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து சுனிதா வில்லியம்ஸ் இன்று பூமிக்கு திரும்புகிறார்

...2-ம் பக்கம்

## அமிர்தசரஸ் கோயில் மீது கையெறி குண்டு வீச்சு: சந்தேக நபர் சுட்டுக்கொலை

...3-ம் பக்கம்

## மும்பைக்கு எதிரான போட்டி: எம்.எஸ்.டோனி 8-வது டவுன் சி.எஸ்.கே. நிர்வாகம் தகவல்

...6-ம் பக்கம்





● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று நிதித்துறை சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள தமிழர் நிதி நிர்வாகம்-தொன்மையும் தொடர்ச்சியும் ஆவண நூலினை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச்செயலாளர் முருகானந்தம், நிதித்துறை முதன்மைச்செயலாளர் த.உதயச்சந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

### ‘தமிழர் நிதி நிர்வாகம்: தொன்மையும் தொடர்ச்சியும்’

# ஆவண நூலை வெளியிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின்

## சிறப்பு இணைய தளத்தையும் தொடங்கி வைத்தார்

சென்னை, மார்ச் 18-

**தமிழக அரசின் நிதித் துறை சார்பில் தயாரிக்கப் பட்டுள்ள ‘தமிழர் நிதி நிர்வாகம்: தொன்மையும் தொடர்ச்சியும்’ ஆவண நூலினை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டு, இதற்கான சிறப்பு இணையப் பக்கத்தைத் தொடங்கி வைத்தார்.**

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: ‘தமிழர் நிதி நிர்வாகம்: தொன்மையும் தொடர்ச்சியும்’ ஆவண நூல் வெளியீடு - சங்ககாலம் முதல் சமூக நீதிக் காலம் வரையிலான தமிழர்களின் நிதி நிர்வாகச் சிறப்புகளின் பெருந்தொகுப்பாகவும் வரலாற்று ஆவணமாகவும் ‘தமிழர் நிதி நிர்வாகம்: தொன்மையும் தொடர்ச்சியும்’ நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் பண்டைய வணிகம், வரிவிதிப்பு முறைகள், காலனிய கால நிதிநிர்வாக நடைமுறைகள், நவீன தமிழகத்தின் நிதிநிலை அறிக்கைகள் ஆராயப்பட்டுள்ளன.

அரிய தகவல்களும் தரவுகளும் நிறைந்துள்ள இந்நூல் பல நூற்றாண்டுகளாகத் தமிழர் நிதி நிர்வாகம் உருவாகி வந்த வரலாற்றையும், தமிழகத்தின் பொருளாதார அடையாளம் வடிவமைக்கப்பட்ட விதத்தையும் குறித்த ஆழமான கண்ணோட்டத்தையும் வழங்குகிறது. இந்த ஆவண நூலில், பொருளியல், வரலாற்றுத் துறைகளைச் சேர்ந்த தமிழகத்தின் புகழ்பெற்ற அறிஞர்களின் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

இச்சிறப்புமிக்க நூலினை தமிழக முதல்வர் வெளியிட, நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் பெற்றுக்கொண்டார்.

**சிறப்பு இணையப்பக்கம்**

‘தமிழர் நிதி நிர்வாகம்: தொன்மையும் தொடர்ச்சியும்’ நூலையொட்டி சேகரிக்கப்பட்ட, நூற்றாண்டு கால நிதிநிலை அறிக்கைகள், விரிவான திட்ட மதிப்பீடுகள், ஒன்றிய-மாநிலத் திட்டக் குழுக்களின் ஆய்வறிக்கைகள், நிதிநிலை அறிக்கை தொடர்பான செய்திக் கட்டுரைகள், இதழ்கள், நூல்கள், ஒளிப்படங்கள் அனைத்தும், தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் மின்நூலகச் சிறப்பு இணையப் பக்கத்தில் (https://www.tamildigitallibrary.in/budget) தொகுக்கப்பட்டுள்ளன. இந்த சிறப்பு இணையப் பக்கத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

பொருளியல், சமூகவியல், அரசியல், வரலாறு எனப் பல்வேறு துறை சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ள இவை உதவும். தமிழக முதல்வர் வெளியிட்ட ‘தமிழர் நிதி நிர்வாகம்: தொன்மையும் தொடர்ச்சியும்’ நூலை மேற்கண்ட இணையப் பக்கத்தில் வாசிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பேரவை தலைவர் அப்பாவு மீதான

# அ.தி.மு.க.வின் நம்பிக்கையில்லா தீர்மானம் சட்டசபையில் தோல்வி

## தீர்மானத்துக்கு ஆதரவு 63 பேர் - எதிர்ப்பு 154 பேர்



● சென்னை சட்டமன்ற பேரவையில் நேற்று அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்டு வந்த சட்டமன்ற பேரவை தலைவரை பதவியிலிருந்து நீக்கக்கோரும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

சென்னை, மார்ச் 18-

**தமிழக சட்டப்பேரவையில் சபாநாயகர் அப்பாவு மீது அ.தி.மு.க. கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மற்றும் டிவிஷன் முறையில் தோல்வி அடைந்தது. அ.தி.மு.க. கொண்டுவந்த இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு 63 பேர் ஆதரவாகவும், 154 பேர் எதிர்ப்பும் தெரிவித்ததால் தோல்வியடைந்ததாக அறிவிக்கப் பட்டது.**

**பல்வேறு குற்றச்சாட்டுகள்**

தமிழக சட்டப்பேரவையில் சபாநாயகர் அப்பாவு மீது அ.தி.மு.க. சார்பில் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டது. சட்டப்பேரவையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்களை பேச அனுமதிப்பது இல்லை, அவர்கள் பேசும்போது சபாநாயகர் அப்பாவு அடிக்கடி குறுக்கீடு செய்கிறார், ஆளுங்கட்சி அமைச்சர்கள், எம்.எல்.ஏக்களிடம் எழுப்பப்படும் கேள்விகளுக்கு சபாநாயகரே பதில் கூறுகிறார், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுவதை நேரலையில் ஒளிப்பரப்புவது இல்லை, சபாநாயகர் ஒருதலைபட்சமாக செயல்படுகிறார் என்பது உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து இந்த தீர்மானத்தை சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் கொண்டு வந்தார்.

**ஓ.பி.எஸ்., செங்கோட்டையன்....**

சட்டப்பேரவை விதிகளின்படி, இந்த தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள 35 எம்.எல்.ஏக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று கூறப்பட்டது. அப்போது அ.தி.மு.க. எம்.எல்.ஏ செங்கோட்டையனும் எழுந்து நின்று தனது ஆதரவைத் தெரிவித்தார். அதே போல் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வமும் அ.தி.மு.க. கொண்டுவந்த நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவையில் சபாநாயகர் அப்பாவு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதைத் தெடர்ந்து, அவையிலிருந்து அப்பாவு வெளியேறினார். இதையடுத்து, துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி அவையை வழிநடத்தினார்.

**இ.பி.எஸ். குற்றச்சாட்டு**

இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி சட்டப்பேரவையில் பேசுகையில், “திமுக தங்களுடைய தேர்தல் அறிக்கையில், ஆண்டுக்கு நூறு நாட்கள் சட்டப்பேரவைக் கூட்டம் நடத்தப்படும் என்று கூறியிருந்தனர். அதன்படி, கடந்த 4 ஆண்டுகளில் 400 நாட்கள் சட்டப்பேரவை நடந்திருக்க வேண்டும். ஆனால் 116 நாட்கள் மட்டுமே தமிழக சட்டமன்றம் நடைபெற்றுள்ளது. மேலும், அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தின்போதும், எதிர்க்கட்சிகள் கூறும் கருத்துகளைக் கேட்பதில்லை. ஒரே நாளில் 4 துறைக்கான மானியக் கோரிக்கை மீதான விவாதங்கள் நடத்தப்படுகிறது” என்பது உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை முன்வைத்து பேசினார்.

**பா.ஜ., பா.ம.க. பங்கேற்கவில்லை...**

தொடர்ந்து குரல் வாக்கெடுப்பின் மூலம் இந்த தீர்மானம் நடத்தப்பட்டது.

(கடைசி பக்கம் பார்க்க)

### சி.பி.ஐ. விசாரணை கோரிய கொல்கத்தா

# மருத்துவ மாணவியின் பெற்றோர் மனு சுப்ரீம் கோர்ட்டில் தள்ளுபடி

கொல்கத்தா, மார்ச் 18-

**கொல்கத்தா மருத்துவ மாணவி பாலியல் வன்கொடுமை-கொலை வழக்கில், புதிய சி.பி.ஐ. விசாரணை கோரிய மாணவியின் பெற்றோர் தொடர்ந்த வழக்கை உச்சநீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.**

கொல்கத்தாவில் உள்ள ஆர்.ஜி. கர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 31 வயது முதுநிலை பெண் பயிற்சி மருத்துவர் கடந்த ஆண்டு ஆகஸ்ட் 9-ஆம் தேதி பாலியல் வன்கொடுமை செய்து கொல்லப்பட்டார். இந்த சம்பவம் நாடு முழுவதுமே அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த வழக்கில் மருத்துவமனையில் தன்னார்வலராக பணியாற்றி வந்த சஞ்சய் ராய் என்பவர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தங்கள் மகளை பாலியல் வன்கொடுமை செய்ததில் மேலும் சிலர் ஈடுபட்டிருக்கலாம் என்று கூறி மேலும் சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என உயிரிழந்த மாணவியின் பெற்றோர் உச்சநீதிமன்றத்தில் மனு அளித்தனர்.

இந்த மனு நேற்று தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா தலைமையிலான அமர்வு முன்பாக விசாரணைக்கு வந்த நிலையில், மாணவியின் பெற்றோர் அளித்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர். அதேநேரத்தில் மாணவியின் பெற்றோர், கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் ஒரு நீதிபதி அமர்வு முன்பாக இதுதொடர்பாக வழக்கு தொடரலாம் என்று கூறினர்.

பிரேத பரிசோதனையில் உள்ள தகவல்களை பார்க்கும் போது தங்கள் மகளின் மரணத்தில் குற்றவாளியான சஞ்சய் ராய் தவிர வேறு நபர்களும் ஈடுபட்டிருக்கலாம். எனவே சி.பி.ஐ. இதுகுறித்து மேலும் விசாரிக்க வேண்டும் என்று அவரது பெற்றோர் கோரி வருகின்றனர்.

# சந்திரயான்-5 திட்டத்துக்கு மத்திய அரசு ஒப்புதல்

## ஜப்பானுடன் இணைந்து செயல்படுத்த முடிவு

புதுடில்லி, மார்ச் 18-

**சந்திரனின் மேற்பரப்பை ஆய்வு செய்வதற்கான சந்திரயான்-5 திட்டத்திற்கு மத்திய அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளதாக இஸ்ரோ தலைவர் வி. நாராயணன் தெரிவித்துள்ளார்.**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் தலைவராக பொறுப்பேற்றுள்ள வி.நாராயணனுக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர் கூறியதாவது:-

'சந்திரயான்-3' விண்கலம் 25 கிலோ எடையுள்ள 'பிரயாக்யான்' ரோவரை சுமந்து சென்றது. 'சந்திரயான்-5' விண்கலம் நிலவின் மேற்பரப்பை ஆய்வு செய்யும் வகையில் 250 கிலோ எடையுள்ள ரோவரை சுமந்து செல்லும். சந்திரயான் திட்டத்தின் முக்கிய பணி என்பது நிலவின் மேற்பரப்பை ஆய்வு செய்வதை அடிப்படையாக கொண்டுள்ளது. 2008-ல் வெற்றிகரமாக ஏவப்பட்ட சந்திரயான்-1 விண்கலம் நிலவின் வேதியியல், கனிமவியல் வரைபடத்தை எடுத்து அனுப்பியது. 2019-ல் ஏவப்பட்ட சந்திரயான்-2 திட்டம் 98 சதவீதம் வெற்றி பெற்றது. சந்திரயான்-2ல் உள்ள உயர் தெளிவுத்திறன் கொண்ட கேமரா நூற்றுக்கணக்கான படங்களை அனுப்பி வருகின்றன.

சந்திரயான்-3 திட்டம் என்பது சந்திரயான்-2 திட்டத்தின் தொடர்ச்சியான பயணமாகும். 2023-ம் ஆண்டு ஆகஸ்ட் 23 அன்று விக்ரம் லேண்டர் நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாக தரையிறக்கப்பட்டது. 2027-ல் தொடங்கப்படும் சந்திரயான்-4 திட்டம் நிலவில் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த சூழலில் மூன்று நாட்களுக்கு முன்பு சந்திரயான்-5 திட்டத்துக்கு ஒப்புதல் கிடைத்தது. ஜப்பானுடன் இணைந்து நாங்கள் அதைச் செய்ய உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# உட்கட்சி பிரச்னைகளை திசைதிருப்ப சபாநாயகர் மீது அ.தி.மு.க. தீர்மானம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை, மார்ச் 18-

**உட்கட்சிப் பிரச்னைகளைத் திசைதிருப்பவே பேரவைத் தலைவர் மீது அ.தி.மு.க. தீர்மானம் கொண்டுவந்துள்ளதாக முதல்வர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.**

எதிர்க்கட்சி உறுப்பினர்களை அதிக நேரம் பேச அனுமதிப்பதில்லை, தொலைக்காட்சியில் நீண்ட நேரம் தங்களது பேச்சை நேரலை செய்வதில்லை, உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பேரவைத் தலைவரே பதிலளிக்கிறார் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை வைத்து சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தை அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் உதயக்குமார் நேற்று கொண்டுவந்தார். இந்த தீர்மானம் விவாதத்துக்கு வந்த நிலையில், பேரவையை விட்டு அப்பாவு வெளியேறினார். துணைத் தலைவர் பிச்சாண்டி அவைக்கு தலைமையேற்று வழிநடத்தினார்.

இந்த தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, பேரவைத் தலைவர் ஒருதலைபட்சமாக செயல்படுவதாக குற்றச்சாட்டை முன்வைத்தார். காங்கிரஸ், விசிக, மதி.மு.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகள் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த நிலையில், பாஜக, பாமக உறுப்பினர்கள் பேரவைக் கூட்டத்தில் நேற்று கலந்து கொள்ளவில்லை.

விவாதத்தின் இறுதியில் பேசிய முதல்வர், ”என் தலையீடோ, அமைச்சர்களின் தலையீடோ இல்லாமல் நடுநிலையோடு பேரவை வழிநடத்தி வருபவர் அப்பாவு” எனத் தெரிவித்தார். தொடர்ந்து, குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்ட நிலையில் தீர்மானம் தோல்வியடைந்தது.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில், ஆட்சியின் மீது குறை சொல்ல முடியாதவர்கள் - உட்கட்சிப் பிரச்சினைகளைத் திசைதிருப்ப நினைத்தவர்கள், பேரவைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்தனர். கடந்த ஆட்சிக்காலத்தைப் போல் அல்லாமல், நடுநிலைமையோடு பேரவையை வழிநடத்திடும் பேரவைத் தலைவர் மீது நம்பிக்கை வைத்து, எதிர்க்கட்சியின் தீர்மானத்தைப் பேரவை நிராகரித்தது. என்று பதிவிட்டுள்ளார்.

# மின் மீட்டர்களை கூடுதல் விலைக்கு விற்றால் நடவடிக்கை எடுக்கப்படும்

## மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவு

சென்னை, மார்ச் 18-


**மின்மீட்டர்களை கூடுதல் விலைக்கு விற்கும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என, மின்வாரியத்துக்கு, மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.**

தமிழகத்தில் வீடுகள் உள்ளிட்ட அனைத்துப் பிரிவுகளிலும் பழுதடைந்த மின் மீட்டர்களை மாற்றித் தரவும் காலதாமதம் ஆவதால், நுகர்வோர் அதிக மின்கட்டணம் செலுத்தும் நிலை ஏற்படுகிறது. எனவே, விரைவாக மின் இணைப்பு வழங்குவதற்கும், குறைபாடு உடைய மீட்டரை மாற்றவும் விண்ணப்பித்த நபரே, தனியார் நிறுவனங்களிடம் இருந்து நேரடியாக மீட்டர்களை வாங்க மின்வாரிய ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டிருந்தது. அதன்படி, எந்தெந்த நிறுவனங்களிடம் இருந்து மீட்டர் வாங்க வேண்டும் என்ற பட்டியலை மின்வாரியம் வெளியிட்டது.

இந்நிலையில், நுகர்வோர் வாங்கித் தரும் மீட்டரை ஏற்பதுடன், மீட்டர் விற்பனையில் தகுதியுள்ள அனைத்து நிறுவனங்களின் விவரங்களை வெளியிடுமாறு, மின்வாரியத்துக்கு, ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, மின்வாரிய தலைவருக்கு, மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: நுகர்வோர் நேரடியாக மீட்டர் வாங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மின்வாரியம் வெளியிட்டுள்ள நிறுவனங்களின் பட்டியலில் ஒன்றிரண்டுக்கு மட்டும் முன்னுரிமை அளிக்கப்பட்டு உள்ளது. ‘100ஏ’ மீட்டருக்கு ஒரே நிறுவனம் மட்டுமே பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஒரு நிறுவனம் என்பதால் முழு சந்தையையும் கட்டுப்படுத்தி நுகர்வோரிடம் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. எனவே, மீட்டர்களை விற்பனை செய்யும் நிறுவனங்கள் கூடுதல் விலைக்கு விற்றால், அந்நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதையடுத்து, 92 நிறுவனங்களின் பட்டியலை மின்வாரியம் வெளியிட்டுள்ளது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| ↑ 341.04 | ↑ 111.55 |
| பாயின்ட் 74,169.95 | பாயின்ட் 22,508.75 |




**தங்கம்**
1 சவரன் ₹65,680
1 கிராம் ₹8,210



**வெள்ளி**
1 கிலோ ₹113,000
1 கிராம் ₹113.00

$ **டாலர்** ₹86.76

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



### சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து
# சுனிதா வில்லியம்ஸ் இன்று மாலை பூமிக்கு திரும்புகிறார்

**வாஷிங்டன், மார்ச் 18-**

9 மாதங்களாக சர்வதேச விண்வெளி மையத்தில் சிக்கியிருந்த சுனிதா வில்லியம்ஸ் இன்று (செவ்வாய்க்கிழமை) மாலை பூமி திரும்பவுள்ளார்.

வெறும் 9 நாள்கள் பயணமாக விண்வெளி மையத்துக்கு சென்ற நாசா விஞ்ஞானிகள் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பட்ச் வில்மோர் ஆகியோர், விண்கலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பூமிக்கு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டது.

நீண்ட முயற்சிகளுக்கு பிறகு ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் தயாரித்த டிராகன் விண்கலம், சர்வதேச விண்வெளி மையத்துக்கு ஞாயிற்றுக்கிழமை சென்றடைந்தது. இதன்மூலம் நேற்றிரவு பூமிக்கு புறப்பட்ட சுனிதா வில்லியம்ஸ் இன்று மாலை வந்தடைவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



சுனிதா வில்லியம்ஸ் மற்றும் பட்ச் ஆகியோருடன் டிராகன் விண்கலத்தில் மேலும் இரண்டு விண்வெளி வீரர்கள் பூமிக்கு திரும்பவுள்ளனர். மார்ச் 17ஆம் தேதி இரவு 10.45 மணிக்கு (அமெரிக்க நேரப்படி) சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து டிராகன் விண்கலம் விடுவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சரியாக மார்ச் 18ஆம் தேதி மாலை 5.57 மணிக்கு அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தையொட்டி கடல் பகுதிக்கு டிராகன் விண்கலம் வந்துசேரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எனக்கு புற்றுநோய் பாதிப்பு இல்லை - மம்மூட்டி விளக்கம்

**கேரளா, மார்ச் 18-**

எனக்கு புற்றுநோய் பாதிப்பு இல்லை என்று மம்மூட்டி விளக்கமளித்துள்ளார்.

மலையாள திரையுலகில் சூப்பர் ஸ்டாராக இருப்பவர் நடிகர் மம்மூட்டி. இவர் நடிப்பில் சமீபத்தில் வெளியான டொமினிக் அண்ட் தி லேடி பர்ஸ் திரைப்படம் வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. அடுத்ததாக பஸூகா திரைப்படம் வரும் அடுத்த மாதம் 10-ம் தேதி வெளியாகவுள்ளது.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக நடிகர் மம்மூட்டிக்கு புற்று நோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது என்ற தகவல் இணையத்தில் பரவி வந்தது அதற்காக மம்மூட்டி படப்பிடிப்பில் இருந்து ஓய்வு எடுத்து வருகிறார் எனவும் கூறப்பட்டு வந்தது.

இந்நிலையில் இந்த செய்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் மமூட்டி தரப்பினர் பதிலளித்துள்ளனர் அதில் இது முற்றிலும் தவறான செய்தி. அவர் நலமாக இருக்கிறார். ரமலான் மாதம் என்பதால் அவர் அதற்காக நோன்பு இருந்து வருகிறார்.

அதனால் படப்பிடிப்பில் இருந்து தற்காலிக ஓய்வு எடுத்து வருகிறார். மேலும் இந்த ஓய்வு முடிந்த பிறகு அவர் மகேஷ் நாராயணன் படப்பிற்கு செல்வார்'' என கூறியுள்ளனர்.

### கடந்த 5 ஆண்டுகளில் அரசுக்கு
# ரூ.400 கோடி வரி செலுத்திய அயோத்தி ராமர் கோயில்

**அயோத்தி, மார்ச் 18-**

அயோத்தி ராமர் கோவில் அறக்கட்டளை சார்பில் ரூ. 400 கோடிக்கு வரி செலுத்தியதாக தகவல் தெரிவித்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் அரசுக்கு அயோத்தி ராமர் கோயில் அறக்கட்டளை ரூ.400 கோடி வரி செலுத்தியுள்ளதாக அந்த அறக்கட்டளையின் செயலர் சம்பத் ராய் தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கடந்த 2020-ம் ஆண்டு பிப்ரவரி 5 முதல் 2025-ஆம் ஆண்டு பிப்ரவரி 5-ம் தேதி வரை, அரசுக்கு ராமர் கோயில் அறக்கட்டளை ரூ.400 கோடி வரி செலுத்தியுள்ளது. இதில் சரக்கு மற்றும் சேவைகள் வரியாக ரூ.270 கோடி செலுத்தப்பட்ட நிலையில், பிற வரி வகைகளின் கீழ் எஞ்சிய ரூ.130 கோடி செலுத்தப்பட்டது. அயோத்தி அறக்கட்டளையின் நிதி ஆவணங்களை தலைமை கணக்குத் தணிக்கையாளர் அலுவலக அதிகாரிகள் தொடர்ந்து தணிக்கை செய்கின்றனர்.

அயோத்திக்கு வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலாவாசிகளின் எண்ணிக்கை 10 மடங்கு அதிகரித்துள்ளது. இதன் மூலம், முக்கிய ஆன்மிக சுற்றுலா மையமாக உருவெடுத்துள்ள அயோத்தி, உள்ளூர் மக்களுக்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தந்துள்ளது. மகா கும்பமேளா நடைபெற்ற போது அயோத்திக்கு 1.26 கோடி பக்தர்கள் வருகை தந்தனர். கடந்த ஆண்டு அயோத்தியில் ராமர் கோயில் திறக்கப்பட்ட நிலையில், அந்த ஆண்டு 5 கோடி பேர் கோயிலுக்கு வந்து வழிபாடு செய்தனர். அந்த ஆண்டு மொத்தம் 16 கோடி பேர் அயோத்திக்கு வந்தனர் என்றார்.

### நம்பிக்கையில்லா தீர்மானம்:
# பேரவையிலிருந்து வெளியேறினார் அப்பாவு

**சென்னை, மார்ச் 18-**

அ.தி.மு.க. தீர்மானத்தைத் தொடர்ந்து, தமிழக சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு அவையைவிட்டு வெளியேறினார்.

சட்டப்பேரவையின் துணைத் தலைவர் பிச்சாண்டி தலைமையில் அப்பாவு மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றன. சட்டப்பேரவை கூட்டத் தொடர் தேதிகளை இறுதி செய்யபேரவைத் தலைவர் அப்பாவு தலைமையில் அலுவல் ஆய்வு குழுக் கூட்டம் அவரது அறையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களுக்கு மு.அப்பாவு பேசுகையில், என் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதற்கான நோட்டீஸை அ.தி.மு.க. வினர் அளித்துள்ளனர். அதில், தங்களை அதிக நேரம் பேச அனுமதிக்கவில்லை எனவும், தொலைக்காட்சியில் நீண்ட நேரம் தங்களது பேச்சை நேரலை செய்யவில்லை எனவும் குற்றஞ்சாட்டியுள்ளனர் எனத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, அப்பாவு மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் பேரவையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று பேரவை செயலாளர் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், நேற்று காலை அ.தி.மு.க. சார்பில் அப்பாவு மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இந்த தீர்மானத்துக்கு அ.தி.மு.க. எம்.எல்.ஏ. செங்கோட்டையன் உள்பட அனைவரும் ஆதரவு தெரிவித்திருந்தனர். இதனைத் தொடர்ந்து, தீர்மானத்தின் மீதான விவாதம் தொடங்கியவுடன் சட்டப்பேரவையில் இருந்து அப்பாவு வெளியேறினார். துணைத் தலைவர் பிச்சாண்டி அவை நடவடிக்கையை வழிநடத்தினார்.

# இ.பி.எஸ். ஆலோசனை கூட்டத்தை புறக்கணித்தார் செங்கோட்டையன்

**சென்னை, மார்ச் 18-**

சென்னை தலைமைச் செயலகத்தில் எடப்பாடி பழனிசாமி நடத்திய ஆலோசனையில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் இந்த முறையும் பங்கேற்கவில்லை.

பேரவைத் தலைவர் மீது அ.தி.மு.க. நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்துள்ள நிலையில் இந்த ஆலோசனை நடைபெற்றது. இருப்பினும் எடப்பாடி பழனிசாமி நடத்திய ஆலோசனையில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் இந்த முறையும் பங்கேற்கவில்லை.

வரும் நிதியாண்டுக்கான தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கை கடந்த 14-ஆம் தேதியும், வேளாண்மைக்கான பிரத்யேக நிதிநிலை அறிக்கை 15-ஆம் தேதியும் தாக்கல் செய்யப்பட்டன. தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால், பேரவை திங்கள்கிழமை காலை 9.30 மணிக்கு கூடவுள்ளது.

### உக்ரைன்-ரஷ்யா இடையே போர் நிறுத்தம்:
# டிரம்ப் - புதின் இன்று பேச்சுவார்த்தை

**மாஸ்கோ, மார்ச் 18-**

உக்ரைன்- ரஷ்யா இடையேயான போர் நிறுத்த ரஷிய அதிபர் புதினுடன் பேச்சுவார்த்தையை அமெரிக்கா அதிபர் நடத்த உள்ளார்.

உக்ரைன் மீது ரஷியா கடந்த 2022-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் படையெடுத்தது. உக்ரைனின் பெரும்பாலான இடங்களை தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. பின்னர் உக்ரைனுக்கு அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகள் ராணுவ உதவி வழங்கியன. இதனால் உக்ரைன் ரஷியாவுக்கு எதிராக பதில் தாக்குதல் நடத்த தொடங்கியது.

ரஷியா பல இடங்களில் பின்வாங்கியது. இருநாடுகளுக்கு இடையிலான எல்லைப் பகுதியில் உக்ரைன் பகுதிகளை ரஷியா ஆக்கிரமித்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையில் 3 வருடங்களை தாண்டி சண்டை நடைபெற்று வருகிறது. சண்டை நடைபெற்று வரும் நிலையில் அமெரிக்க அதிபர் தேர்தல் வெற்றி பெற்ற டொனால்டு டிரம்ப் உக்ரைன்- ரஷியா இடையிலான சண்டையை முடிவுக்கு கொண்டு வர முயற்சி மேற்கொண்டு வருகிறார்.

30 நாட்கள் கொண்ட போர் நிறுத்தம் தொடர்பாக உக்ரைன் மற்றும் ரஷியா இடையே அமெரிக்கா பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. ஏறக்குறைய இரு நாடுகளும் சம்மதிக்கும் நிலையில்தான் உள்ளது.

இந்த நிலையில் நேற்று ரஷிய அதிபர் புதின் உடன் பேச இருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் புளோரிடாவில் இருந்து வாஷிங்டனுக்கு செல்லும் வழியில் பத்திரிகையாளர்களுடன் உரையாடினார். அப்போது "செவ்வாய்க்கிழமை சில அறிவிப்புகள் வெளியாகுவதை நாம் பார்க்கலாம். நான் புதின் உடன் செவ்வாய்க்கிழமை பேச இருக்கிறேன். கடந்த வாரத்தில் போர் நிறுத்தம் தொடர்பாக பல்வேறு பணிகள் நடைபெற்றன. நாங்கள் போரை முடிவுக்கு கொண்டு வர முடியுமா? எனப் பார்க்கிறோம்.

போரை முடிவுக்கு கொண்டு வருவதில் ஒரு பகுதியாக நிலம் மற்றும் மின் நிலையங்கள் ஒரு பகுதியாக இருக்கும். நாங்கள் நிலங்கள் குறித்து பேச இருக்கிறோம். மின் நிலையங்கள் குறித்து பேச இருக்கிறோம் என டிரம்ப் தெரிவித்தார்.

கடந்த வாரம் உக்ரைனுக்கு ஆயுதம் வழங்குவதை அமெரிக்கா தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தது.

அந்த தடையை திரும்பப் பெற்றது. இதனைத் தொடர்ந்து டொனால்டு டிரம்ப்- புதின் இடையில் விரைவில் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்வோம் என ரஷியா கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

### உக்ரைனிய ஆயுத படைகளுக்கு
# புதிய தலைவரை நியமனம் செய்தார் அதிபர் ஜெலன்ஸ்கி

**கீவ், மார்ச் 18-**

உக்ரைனிய ஆயுத படைகளின் புதிய தலைவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ரஷியா மற்றும் உக்ரைன் இடையே 2022-ம் ஆண்டு பிப்ரவரி 24-ந்தேதி போர் மூண்டது. நேட்டோவில் இணையும் உக்ரைனின் முடிவுக்கு எதிராக நடந்த இந்த போரில், அந்நாட்டின் கீவ், கார்கிவ், டொனெட்ஸ்க் உள்ளிட்ட பல நகரங்களை ரஷியா தொடக்கத்தில் கைப்பற்றியது. எனினும், அவற்றை உக்ரைன் பதிலடி கொடுத்து பின்னர் மீட்டது.

போரானது 3 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. உக்ரைனுக்கு அமெரிக்கா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் ஆதரவளித்து வருகின்றன. இதற்கேற்ப, அந்நாடுகள் ராணுவம் மற்றும் நிதி உதவியை வழங்கி வருகின்றன. போர் தொடங்கிய பின்பு, உக்ரைனில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்நிலையில், உக்ரைன் ஆயுத படைகளின் புதிய தலைவராக ஆண்ட்ரி நேட்டோவ் என்பவரை அதிபர் ஜெலன்ஸ்கி நியமனம் செய்து உள்ளார். உக்ரைனின் அனாடலி பார்ஹைலெவிச் என்பவர் கடந்த 2024-ம் ஆண்டு பிப்ரவரி முதல் இந்த பதவியை வகித்து வந்த நிலையில், இந்த மாற்றம் பற்றிய அறிவிப்பு வெளியாகி உள்ளது.

போர் திறனை மேம்படுத்தும் வகையில், ஆயுத படைகளை நாங்கள் திட்டமிட்ட முறையில் உருமாற்றியுள்ளோம் என அதுபற்றி பாதுகாப்பு மந்திரி ருஸ்டெம் உமரோவ் கூறியுள்ளார். எனினும், அவர் குழுவில் ஒருவராக தொடர்ந்து நீடிப்பார் என உமரோவ் உறுதிப்படுத்தி உள்ளார்.

இதனால், உக்ரைனின் பாதுகாப்பு அமைச்சகத்தின் ஐ.ஜி.யாக பார்ஹைலெவிச் இனி செயல்படுவார். ராணுவத்தின் நிலைப்பாடுகளை ஒட்டுமொத்த அளவில் மேற்பார்வை செய்வதுடன், ராணுவ ஒழுக்கம் வலுப்படும் வகையிலான பணிகளையும் அவர் கவனிப்பார் என்று உமரோவ் கூறியுள்ளார். இதேபோன்று, ஆயுத படைகளின் தளபதியாக, அலெக்சாண்டர் சிர்ஸ்கை தொடர்ந்து பதவி வகிப்பார். ரஷியா முழு அளவில் படையெடுப்பை தொடங்கிய 2022-ம் ஆண்டு முதல், அதிபர் ஜெலன்ஸ்கி, அரசு மற்றும் ராணுவத்தில் அடிக்கடி அதிகாரிகள் மட்டத்தில் மாற்றங்களை செய்து வருகிறார்.

# உலகின் பிரபல உணவு பட்டியல்: பரோட்டாவுக்கு 6-வது இடம்

**சென்னை, மார்ச் 18-**

உலகின் பிரபல உணவு பட்டியலில் பரோட்டா 6-வது இடத்தை பிடித்துள்ளது.

உலகின் 50 சிறந்த பிரெட்கள் பட்டியலில் தமிழ்நாட்டின் பிரபல உணவான பரோட்டா 6-ம் இடத்தை பிடித்துள்ளது. இந்த பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த பட்டர் கார்லிக் நாண்-க்கு முதலிடம் பிடித்துள்ளது. வட இந்திய உணவான பரோட்டா 18-வது இடத்தையும் பிடித்துள்ளது.

**18-03-2025**




**மேஷம்:-** பணவரவு பரவசம் தரும். அலங்காரப் பொருட்கள் சேரும். காதல் ஈடுபாட்டால் கவலைகளை மறந்து களிப்படைவீர்கள். அரசாங்க உதவிகள் தடையின்றி கிடைக்கும்.

**ரிஷபம்:-** தனவரவு கூடும். எதிரிகள் பணிவர். நண்பர்கள் உதவி நன்மை பயக்கும். எண்ணிய எண்ணியாங்கு நடக்கும். பெயரும் புகழும் ஓங்கும். புதிய பெண் சிநேகம் புத்துணர்வு தரும்.

**மிதுனம்:-** குழந்தைகளுக்கு மருத்துவ கவனிப்பு தேவைப்படும். எவ்வளவு திறமையுடன் செயல்பட்டாலும் உங்கள் திறமை பாராட்டுப் பெறாது. கவனமாக படித்தால் அதிக மதிப்பெண்கள் பெறலாம்.

**கடகம்:-** தாயின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். முயற்சி திருவினை யாக்கும் என முன்னேற முயலுங்கள் வெற்றி உங்கள் பக்கம்.

**சிம்மம்:-** மனதில் தைரியமும், புதிய உற்சாகம் பிறக்கும். மனையாளின் ஒத்துழைப்பு மனமகிழ்ச்சி தரும். முகநூல் மூலம் நட்பு வட்டம் விரிவடையும்.. புதிய உத்தியோக வாய்ப்புகள் ஏற்படும்.

**கன்னி:-** சுக சௌக்கியத்திற்கு பங்கம் விளையும். எதிர்பார்த்த இனங்களில் பணவரவு தாமதப்படும். எதையும் சாதிக்கும் திறமை பெறுவீர்கள். செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**துலாம்:-** தனவரவு தாராளமாக இருக்கும். நினைத்த காரியங்கள் நினைத்தது போல் நடக்கும். வாக்குவன்மையால் பொருளாதார நிலை மேம்படும். ஆராய்ச்சியாளர்களுக்கு அருமையான நாள்.

**விருச்சிகம்:-** தொழில் புரிவோருக்கு பணமுடை அதிகரிக்கும். உண்ணவும் நேரமின்றி உழைப்பு அதிகமாகும். நேர்வழியில் பணம் செலவு செய்தால் நிம்மதி பிறக்கும்.

**தனுசு:-** தொழில் மற்றும் வியாபாரம் சம்பந்தமாக பெரியவர்கள் சந்திப்பு இனிதாக அமையும். எண்ணியபடி எண்ணிய காரியங்கள் ஏற்றம் தரும். பெண்களால் நன்மை உண்டாகும்.

**மகரம்:-** புதிய உத்தியோக வாய்ப்புகள், பதவி உயர்வு, ஆகியவற்றை எதிர்பார்க்கலாம். கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வாழ்க்கையில் இனிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

**கும்பம்:-** இன்பமும் துன்பமும் மாறி வரும் நாள். புண்ணிய காரியங்களில் ஈடுபாடு ஏற்படும். தெய்வ நம்பிக்கையால் தேகத்தில் புது தெம்பு ஏற்படும். உல்லாசப் பயணங்கள் உற்சாகம் தரும்.

**மீனம்:-** எந்த விஷயத்திலும் நியாயமாக நடக்க வேண்டிய நாள். மனைவியின் கலகத்தால், மற்றவர்கள் பகை ஏற்படும். அதிகாரிகளிடம் பணிவாக நடத்தல் அவசியம்.

# துளசி கப்பார்ட் - அஜித் தோவல் சந்திப்பு

**டெல்லி, மார்ச் 18-**

இந்தியா வந்த அமெரிக்க தேசிய புலனாய்வு இயக்குநர் துளசி கப்பார்ட், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலை சந்தித்து பேசினார்.

அமெரிக்காவில் கடந்த ஜனவரியில் டொனால்டு டிரம்ப் தலைமையிலான ஆட்சி அமைந்தது. அவரது அரசில் அமெரிக்க தேசிய புலனாய்வு இயக்குநராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த துளசி கப்பார்ட் உள்ளார். இந்நிலையில் துளசி கப்பார்ட் இந்தியா வருகை தந்துள்ளார். நேற்று காலை இந்தியாவுக்கு வருகை தந்த அவர் டெல்லியில் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரான அஜித் தோவலுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பயங்கரவாதம் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களால் ஏற்படும் அச்சுறுத்தல்களைச் சமாளிப்பதற்கும், இரு நாட்டு உளவுத் துறை ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பாக இருவரும் பேசியதாக தெரிகிறது. அமெரிக்காவில் செயல்பட்டு வரும் இந்திய எதிர்ப்பு காலிஸ்தான் பிரிவினைவாதிகள் குறித்தும் பேசப்பட்டுள்ளது.

இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் பாதுகாப்பு, பயங்கரவாத நிதி மற்றும் பணமோசடியை எதிர்ப்பதற்கான ஒத்துழைப்பு மற்றும் நாடுகடத்தல் மற்றும் குடியேற்றம் தொடர்பான பிரச்சினைகளுக்கும் கவனம் கொடுக்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடியின் அழைப்பின் பேரில் இந்தியா வந்துள்ள துளசி கப்பார்ட், டெல்லியில் இன்று தொடங்கி 3 நாட்கள் நடைபெறும் ரெய்சினா பேச்சுவார்த்தையின் ஒரு பகுதியாக நாளைய நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்ற உள்ளார். இந்த கூட்டத்தில் பல்வேறு நாடுகளை சேர்ந்த முக்கிய பிரதிநிதிகளும் பங்கேற்க உள்ளனர். இதை முடித்துவிட்டு அடுத்து ஜப்பான், தாய்லாந்து மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கு பயணிக்கிறார் துளசி கப்பார்ட்.

# போப்பின் புதிய புகைப்படம் வெளியீடு

**ரோம்நகர், மார்ச் 18-**

போப் பிரான்சிஸ், பலிப்பீடத்தின்முன் அமர்ந்து இருக்கும் புதிய புகைப்படத்தை வாடிகன் நிர்வாகம் வெளியிட்டுள்ளது.

ஜெமில்லி மருத்துவமனையில் சக பாதியார்களுடன் அவர் திருப்பலியில் கலந்து கொண்டதாகவும், அவரின் உடல்நிலை தற்போது முன்னேறி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புகைப்படம் பின்னால் இருந்து எடுக்கப்பட்டது. அதில், போப் பிரான்சிஸ் ஊதா நிற சட்டை அணிந்தபடி பலிபீடத்தின் முன் சக்கர நாற்காலியில் அமர்ந்திருப்பதைக் காட்டுகிறது.

கடந்த மாதம் 14-ம் தேதி மருத்துவமனையில் போப் அனுமதிக்கப்பட்ட பிறகு வெளியான முதல் புகைப்படம் இதுவாகும். போப் பிரான்சிஸ்(88) மூச்சுக் குழாய் அழற்சியால் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இத்தாலி தலைநகர் ரோமில் உள்ள ஜெமெலி மருத்துவமனையில் கடந்த மாதம் 14-ம் தேதி அனுமதிக்கப்பட்டார்.



அவருக்கு எடுக்கப்பட்ட சிடி ஸ்கேன் பரிசோதனையில், நுரையீரல் இரண்டிலும் நிமோனியா தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து, அவருக்கு ஆண்டிபயோடிக் மருந்துகள் அளிக்கப்பட்டு மருத்துவ கண்காணிப்பில் இருந்து வருகிறார். இதனிடையே, அவரது சிறுநீரகங்கள் லேசான பாதிப்புக்குள்ளாகியிருப்பது மருத்துவ பரிசோதனையில் கண்டறியப்பட்டிருப்பதாகவும்மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அவருக்கு கடந்த 3-ம் தேதி மூச்சு விடுவதில் மீண்டும் சிரமம் ஏற்பட்டதாகவும், நுரையீரல் பாதிப்பு அதிகரித்ததையும் தொடர்ந்து மீண்டும் வெண்டிலேட்டர் மாற்றப்பட்டு அதன் உதவியுடன் அவர் சுவாசித்ததாக வாடிகன் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டது.

**மரம் மனிதனின் உரம்**

# நாய் கடித்தவுடன் ரேபிஸ் தடுப்பூசி போடுவது அவசியம்: சுகாதாரத்துறை

**சென்னை, மார்ச் 18-**

நாய் கடித்தவுடன் ரேபிஸ் தடுப்பூசி செலுத்திக்கொள்வது அவசியம் என்று பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தி உள்ளது.

பொது சுகாதாரத்துறை இயக்குனர் செல்வவிநாயகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

கடந்த சில நாட்களுக்கு முன்பு, ராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் நாய் கடித்து 3 மாதம் ஆகியும் ரேபிஸ் தடுப்பூசி போட்டுக்கொள்ளவில்லை என்பதால் உயிரிழந்துவிட்டார் என விசாரணையில் தெரியவந்துள்ளது. எனவே, மக்கள் அனைவரும் நாய் கடித்தவுடன் ரேபிஸ் தடுப்பூசியை செலுத்திக்கொள்வது அவசியம்.

ரேபிஸ் ஒரு கொடிய வைரஸ் நோய். நாய்கள் கடிப்பதால் மட்டும் ரேபிஸ் வருவதில்லை. வீட்டில் வளர்க்கப்படும் நாய், பூனை, ஆடு, மாடு மற்றும் வீட்டு விலங்குகள் கடிப்பதாலும் பரவுவதற்கு வாய்ப்புள்ளது. நாய் கடித்தவுடன் அந்த காயத்தை குறைந்தது 15 நிமிடங்களுக்கு சோப்பு தண்ணீரால் கழுவ வேண்டும். நாய் கடித்தவுடன் தடுப்பூசிகள் போட்டு கொள்வதன் மூலம் ரேபிஸ் நோயை 100 சதவீதம் வரவிடாமல் தடுத்து விடலாம்.

அனைத்து அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு ஆஸ்பத்திரிகளிலும் தடுப்பூசிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. எனவே, பொதுமக்கள் வெறிநாய்கடியின் அவசியத்தை அறிந்து உரிய நேரத்தில் சிகிச்சை பெற்று, ரேபிஸ் பாதிப்பில் இருந்து தற்காத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# அர்ஜூனா இடைநீக்கம் குறித்த தகவலுக்கு த.வெ.க. மறுப்பு

**சென்னை, மார்ச் 18-**

த.வெ.க. வில் இருந்து ஆதவ் அர்ஜூனா இடைநீக்கம் செய்யப்பட்டதாக வெளியான தகவலுக்கு அக்கட்சி மறுப்பு தெரிவித்துள்ளது.

விஜய்யின் தமிழக வெற்றிக்கழகத்தின் தேர்தல் பிரிவு பொதுச்செயலாளராக செயல்பட்டு வருபவர் ஆதவ் அர்ஜூனா. விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இருந்து விலகிய ஆதவ் அர்ஜூனா கடந்த ஜனவரி மாதம் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தார். இதனிடையே, த.வெ.க. வில் இருந்து ஆதவ் அர்ஜூனா இடைநீக்கம் செய்யப்பட்டதாக இன்று சமூகவலைதளத்தில் தகவல்கள் பரவின. இதனால், த.வெ.க. வட்டாரத்தில் பரபரப்பான சூழ்நிலை நிலவியது. இந்நிலையில், ஆதவ் அர்ஜூனா கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்யப்படதாக வெளியான தகவலுக்கு த.வெ.க. மறுப்பு தெரிவித்துள்ளது.

# கழிவுநீர் குழியில் மூழ்கி உயிரிழந்த குழந்தை குடும்பத்திற்கு ரூ.3 லட்சம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நிதியுதவி அறிவிப்பு

**சென்னை, மார்ச் 18-**

கழிவுநீர்க் குழியில் மூழ்கி உயிரிழந்த குழந்தையின் குடும்பத்தினருக்கு ரூ. 3 லட்சம் நிதியுதவியை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:-

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், டி. ஆண்டிப்பட்டி கிராமத்தில் வசித்துவரும் சந்தனகருப்பு – கிருஷ்ணவேணி தம்பதியரின் இரண்டு குழந்தைகள் கேசவன் (வயது 4) மற்றும் ரோஷன் ஆகிய இருவரும் கடந்த 15.3.2025 அன்று மாலை 4.00 மணியளவில் வீட்டினருகே விளையாடிக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக அருகிலிருந்த கழிவுநீர்க் குழியில் விழுந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் நீரில் தத்தளித்த ரோஷன் அருகில் இருந்தவர்களால் மீட்கப்பட்ட நிலையில் மற்றொரு குழந்தை கேசவன் நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்த துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன். இச்சம்பவத்தில் உயிரிழந்த குழந்தை கேசவனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த குழந்தையின் பெற்றோருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 3 லட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அ.தி.மு.க. தீர்மானத்திற்கு ஆதரவு ஏன்? ஓ.பன்னீர்செல்வம் விளக்கம்

**சென்னை, மார்ச் 18-**

சபாநாயகருக்கு எதிரான அ.தி.மு.க. தீர்மானத்திற்கு ஆதரவு அளித்தது ஏன்? என்பது குறித்து ஓ.பன்னீர்செல்வம் விளக்கமளித்துள்ளார்.

தமிழக சட்டசபையில் அ.தி.மு.க. சார்பாக சபாநாயகர் அப்பாவு மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அதற்கு அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் 66 பேரில், 63 பேர் தங்கள் ஆதரவை தெரிவித்திருந்தனர். இருப்பினும் குரல் வாக்கெடுப்பு மற்றும் எண்ணி கணிக்கும் முறை மூலமாக, சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வியடைந்ததாக துணை சபாநாயகர் பிச்சாண்டி அறிவித்தார்.

இந்த நிலையில், சபாநாயகருக்கு எதிரான அ.தி.மு.க. தீர்மானத்திற்கு ஆதரவு அளித்தது ஏன்? என்பது குறித்து முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் விளக்கமளித்துள்ளார். இதற்கு பதிலளித்த அவர், "தற்போது அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராக தொடர்ந்து கொண்டிருக்கிறேன். அந்த அடிப்படையில் கொறடா உத்தரவை மீறக்கூடாது என்பதற்காக சபாநாயகருக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தேன்'' என்று தெரிவித்தார்.

# டாஸ்மாக் முற்றுகை போராட்டம்: அண்ணாமலை, பா.ஜ.க. தலைவர்கள் கைது



**சென்னை, மார்ச் 18-**

டாஸ்மாக் ஊழலுக்கு எதிராக முற்றுகை போராட்டத்தில் ஈடுபட முயன்ற பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை கைது செய்யப்பட்டார்.

டாஸ்மாக் மீதான ஊழல் புகார் குறித்து தமிழக அரசுக்கு எதிராக பா.ஜ.க. சென்னை எழும்பூரில் போராட்டம் நடத்த திட்டமிட்டிருந்தது. இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள சென்ற அண்ணாமலையை, சென்னையை அடுத்த அக்கரை பகுதியில் போலீஸார் தடுத்து நிறுத்தி, கைது செய்தனர்.

இதனிடையே அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது: தி.மு.க. மாபெரும் தவறு செய்துள்ளது. அதனால் தான் அவர்கள் பயப்படுகிறார்கள். ஜனநாயக முறையில் போராடினால் தடுக்கிறார்கள். அடுத்த ஆர்ப்பாட்டம் தேதி சொல்லாமல் நடக்கும். அது 22 ஆம் தேதி நடக்கலாம் அல்லது வேறு எந்த தேதியிலும் நடக்கலாம். எதை வேண்டுமானாலும் முற்றுகையிடுவோம். அது முதல்வரின் வீடாக கூட இருக்கலாம், டாஸ்மாக்காக இருக்கலாம். முதல்வரும் இதில் சம்மந்தப்பட்டிருக்கிறார். அவரும் தப்பிக்க முடியாது. இந்தியாவிலேயே மிக மோசமான அரசியல் தலைவர் என்று பார்த்தால் அது செந்தில் பாலாஜி தான். செந்தில் பாலாஜி அமைச்சராக தொடர்வதற்கு தார்மீக உரிமை இருக்கிறதா என்று உச்சநீதிமன்றமே கேள்வி எழுப்புகிறது. இவர்களெல்லாம் தற்போது நல்லவர்கள் வேஷம் போடுகிறார்கள்.

2024 ஆம் ஆண்டு மக்களவை தேர்தலில் டாஸ்மாக் பணத்தை வைத்து தி.மு.க. தேர்தலை சந்தித்தது. 2026-ம் ஆண்டு சட்டசபை தேர்தலையும் ஊழல் பணத்தை வைத்து தி.மு.க. சந்திக்க உள்ளது. ஊழல் செய்யவில்லை என்றால், அவர்கள் வெள்ளை அறிக்கை தாக்கல் செய்யட்டும்'' எனத் தெரிவித்தார்.

கைது செய்யப்படுவதற்கு முன்னதாக அண்ணாமலை தனது எக்ஸ் தளத்தில், " தி.மு.க. அரசின் ரூ.1,000 கோடி டாஸ்மாக் ஊழலைக் கண்டித்து, பா.ஜ.க. சார்பில், இன்று (நேற்று) சென்னை டாஸ்மாக் தலைமை அலுவலகம் முற்றுகைப் போராட்டம் அறிவித்திருந்தோம். தொடைநடுங்கி தி.மு.க. அரசு, பா.ஜ.க. மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் ஆளுநருமான, தமிழிசை மற்றும் , மாநிலச் செயலாளர் வினோஜ் பி. செல்வம் மற்றும் மாநில மாவட்ட நிர்வாகிகளைப் போராட்டத்தில் பங்கேற்கக் கூடாது என, வீட்டுச் சிறையில் வைத்திருக்கிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஓ.பன்னீர்செல்வம் கேள்வியால் குலுங்கி சிரித்த எடப்பாடி பழனிசாமி

**சென்னை, மார்ச் 18-**

மாந்திரீக பூஜை குறித்து ஓ.பன்னீர்செல்வம் குறுக்கிட்டு கேள்வி எழுப்பிய போது எடப்பாடி பழனிசாமி குலுங்கி சிரித்தார்.

தமிழக சட்டசபையில் நேற்று நடைபெற்ற விவாதத்தின்போது, திருவாலங்காடு கோவிலில் மாந்திரீக பூஜைக்கு போதிய வசதியில்லை என திருவள்ளூர் எம்.எல்.ஏ. ராஜேந்திரன் பேசினார்.

அப்போது ஓ.பன்னீர்செல்வம் குறுக்கிட்டு மாந்திரீக பூஜை குறித்து அமைச்சர் சேகர்பாபுவிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி குலுங்கி சிரித்தார். பின்னர் பரிகார பூஜையைத்தான் தவறுதலாக மாந்திரீக பூஜை என சொன்னேன் என்று எம்.எல்.ஏ. ராஜேந்திரன் விளக்கமளித்தார். இதையடுத்து, மாந்திரீகம் பற்றி ஓ.பன்னீர்செல்வத்திற்கு தெரியாதது ஒன்றுமில்லை என அமைச்சர் சேகர்பாபு நகைச்சுவையாக பதிலளித்தார். ஆன்மிகவாதியான ஓ.பன்னீர்செல்வம், பல கோவில்களுக்கு சென்று எண்ணங்கள் நிறைவேற வழிபடுபவர் என சேகர்பாபு கூறினார். இந்த விவாதத்தின்போது அவையில் சிரிப்பலை எழுந்தது.

# அமிர்தசரஸ் கோயில் மீது கையெறி குண்டு வீச்சு: சந்தேக நபர் சுட்டுக்கொலை

**அமிர்தசரஸ், மார்ச் 18-**

போலீஸாருடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் அமிர்தசரஸ் கோயில் குண்டுவெடிப்பு சந்தேக நபர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பஞ்சாப் மாநிலம், அமிர்தசரஸின் கண்ட்வாலா பகுதியில் உள்ள கோயில் மீது வெள்ளிக்கிழமை நள்ளிரவு இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள் கையெறி குண்டை வீசினர். அது வெடித்துச் சிதறியதும் அவர்கள் தப்பியோடிவிட்டனர். தாக்குதலில் யாரும் காயமடையவில்லை. சம்பவ இடத்தில் காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டனர். தாக்குதலைத் தொடர்ந்து, கோயில் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

அமிர்தசரஸ் கோயில் மீதான தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ-க்கு தொடர்பு இருக்கலாம் என்று பஞ்சாப் காவல் துறை சந்தேகம் தெரிவித்திருந்தது. இந்த நிலையில் உளவுத்துறையின் தகவல் அடிப்படையில், அமிர்தசரஸ் காவல்துறை கோயில் மீதான தாக்குதலுக்கு காரணமானவர்களைக் கண்டுபிடித்ததாக பஞ்சாப் காவல்துறைத் தலைவர் கௌரவ் யாதவ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில், "ராஜசன்சியில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் குர்பிரீத் சிங் மற்றும் ஆய்வாளர் அமோலக் சிங் காயமடைந்தனர். தற்காப்புக்காக போலீஸார் திருப்பிச் சுட்டனர். இதில் குற்றம்சாட்டப்பட்டவர் காயமடைந்தார். அவர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் பின்னர் பலியானார். மற்ற குற்றவாளி தப்பி ஓடிவிட்டார். அவரைக் கைது செய்ய முயற்சிகள் நடந்து வருகின்றன என்று தெரிவித்தார்.

# அமைச்சர்கள் பெரியகருப்பன், சிவசங்கர் மீதான வழக்குகளை ரத்து செய்தது சென்னை ஐகோர்ட்

**சென்னை, மார்ச் 18-**

அமைச்சர்கள் பெரியகருப்பன், சிவசங்கர் மீதான வழக்குகள் ரத்து செய்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

தமிழ்நாடு அமைச்சர்கள் பெரியகருப்பன் மற்றும் எஸ்.எஸ்.சிவசங்கர் மீதான வழக்குகளை ரத்து செய்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. 2018-ம் ஆண்டு அனுமதியின்றி போராட்டத்தில் ஈடுபட்டதாக, அமைச்சர் சிவசங்கர் உள்ளிட்டோர் மீது அரியலூர் போலீசாரால் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. மேலும் கடந்த ஆண்டு நடைபெற்ற மக்களவை தேர்தலின் போது, அனுமதிக்கப்பட்ட நேரத்தை தாண்டி பிரசாரம் செய்ததாக, அமைச்சர் சிவசங்கர் மீது தேர்தல் விதி மீறல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதேபோல, கடந்த 2021-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின் போது தேர்தல் விதிமுறைகளை மீறியதாக, அமைச்சர் பெரிய கருப்பன் மீது சிவகங்கை மாவட்டம், கண்டவராயன்பட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்குகளை ரத்து செய்யக்கோரி அமைச்சர்கள் சிவசங்கர் மற்றும் பெரியகருப்பன் சார்பில் சென்னை ஐகோர்ட்டில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுக்களை இன்று விசாரித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், அமைச்சர்கள் மீதான வழக்குகளை ரத்து செய்து உத்தரவிட்டார்.

# புதிய கல்விக் கொள்கை அமலுக்கு எதிர்ப்பு: புதுச்சேரி சட்டசபையில் இருந்து தி.மு.க., காங்கிரஸ் வெளிநடப்பு

**புதுச்சேரி, மார்ச் 18-**

புதுச்சேரியில் புதிய கல்விக் கொள்கை அமலுக்கு எதிர்ப்பு தெரிவித்து சட்டப் பேரவையில் இருந்து தி.மு.க. , காங்கிரஸ் எம்.எல்.ஏ. க்கள் வெளிநடப்பு செய்தனர்.

புதுச்சேரி சட்டப்பேரவையில் நேற்று கேள்வி நேரத்தின்போது என்.ஆர். காங்கிரஸ் எம்.எல்.ஏ. சந்திர பிரியங்கா புதிய கல்விக் கொள்கை குறித்து கேள்வி எழுப்பினார்.

அப்போது தி.மு.க. எம்.எல்.ஏ. நாஜிம் குறுக்கிட்ட போது, "உங்கள் பேரக்குழந்தையும், இங்குள்ள பலரின் குழந்தைகளும் சி.பி.எஸ்.இ. பள்ளிகளில்தான் படிக்கிறார்கள்'' என்றார். அதற்கு "புதிய கல்விக் கொள்கை வேறு - சி.பி.எஸ்.இ. கொள்கை வேறு'' என்று தி.மு.க. எம்.எல்.ஏ. க்கள் பதில் தந்தனர். இதனால் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

அப்போது எதிர்க்கட்சித் தலைவர் சிவா, "புதியக் கல்விக் கொள்கை மத்திய அரசு சட்டமா? 2028-க்கு பிறகு இதை கட்டாயமாக்கி விடுவீர்கள். மக்கள் கருத்துக்கு எதிராக செயல்படுகிறீர்கள்'' என்றார்.

அப்போது மீண்டும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. மைக்குகளின் இணைப்பு நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், பேரவைத் தலைவர் செல்வம், ''சி.பி.எஸ்.இ. பாடத்தை புதுச்சேரியில் அமல்படுத்தியது யார் என்பது அனைவருக்கும் தெரியும்'' என்றார். எதிர்க்கட்சித் தலைவர் சிவா, ''புதிய கல்விக் கொள்கையை நீங்கள்தான் அமல்படுத்தியுள்ளீர்கள். மாணவர்களுக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ். கொள்கையை அமல்படுத்துவதை கண்டித்து வெளிநடப்பு செய்கிறோம்'' என்றார். அதையடுத்து தி.மு.க. , காங்கிரஸ் கட்சியினர் வெளிநடப்பு செய்தனர்.

# அ.தி.மு.க.வின் தீர்மானத்தை புறக்கணித்த பா.ஜ.க, பா.ம.க.

**சென்னை, மார்ச் 18-**

அ.தி.மு.க. கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கான வாக்கெடுப்பை பா.ஜ.க. , பா.ம.க. வினர் புறக்கணித்தனர்.

தமிழக சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடர் மார்ச் 14 அன்று தொடங்கி நடைபெற்று வருகிறது. நேற்று காலை சட்டப்பேரவை 9.30 மணிக்கு கூடியது. பேரவைத் தலைவர் அப்பாவு மீது அ.தி.மு.க. நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்துள்ள நிலையில் அதுகுறித்த விவாதம் மற்றும் வாக்கெடுப்பு நடைபெற்றது.

இதுதொடர்பான ஆலோசனைக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்றது. இதில், அ.தி.மு.க.வினர் பலர் கலந்து கொண்ட நிலையில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் பங்கேற்கவில்லை. செங்கோட்டையனின் வாக்கு முக்கியமானதாகக் கருதப்படும் நிலையில் அவருடன் அ.தி.மு.க. நிர்வாகிகள் சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தனர். பின்னர், இந்தத் தீர்மானத்திற்கு செங்கோட்டையன் ஆதரவு தெரிவித்தார்.

இந்த நிலையில் வாக்கெடுப்புக்கு விசிக, காங்கிரஸ் ஆகிய கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தன. காங்கிரஸ் சார்பில் 17 உறுப்பினர்கள் பேரவைத் தலைவருக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளனர். இதனைத் தொடர்ந்து, பா.ஜ.க. வினர் வாக்கெடுப்பைப் புறக்கணித்தனர். பின்னர், பா.ம.க. உறுப்பினர்களும் வாக்கெடுப்பைப் புறக்கணித்தனர். மேலும், ஜி.கே.மணி உள்ளிட்ட பா.ம.க. உறுப்பினர்கள் நேற்று சட்டப்பேரவைக்கு வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீரில் பயங்கரவாதி சுட்டுக்கொலை

**ஜம்மு, மார்ச் 18-**

ஜம்மு-காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கி சூட்டில் பயங்கரவாதி ஒருவர் கொல்லப்பட்டார்.

ஜம்மு-காஷ்மீரின் குப்வாராவின் எல்லை மாவட்டமான ஹந்த்வாராவில் உள்ள ஜசல்தாரா பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து, திங்கள்கிழமை காவல்துறை மற்றும் பாதுகாப்புப்படையின் கூட்டுக் குழு அங்கு சுற்றி வளைத்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டது.

அப்போது அப்பகுதியில் மறைந்திருந்த பயங்கரவாதிகள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதாக வட்டாரங்கள் தெரிவித்தன. உடனே பாதுகாப்புப்படையினரும் பதில் தாக்குதல் தொடுத்தனர். அடுத்தடுத்த துப்பாக்கிச் சண்டையில், பாதுகாப்புப் படையினரால் பயங்கரவாதி ஒருவன் சுட்டுக்கொல்லப்பட்டான். மேலும் காவலர் ஒருவரும் காயமடைந்தார் என்று வட்டாரங்கள் தெரிவித்தன. காயமடைந்த காவலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தேடுதல் நடவடிக்கையை தீவிரப்படுத்த கூடுதல் படையினர் அப்பகுதிக்கு விரைந்துள்ளனர். இரண்டு முதல் மூன்று பயரங்கரவாதிகள் அந்தப் பகுதியில் சிக்கியுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது.

# செங்கோட்டையனுக்கு பிடித்தது போல பதில் சொல்வேன்: எ.வ.வேலு கலகல!

**சென்னை, மார்ச் 18-**

மானிய கோரிக்கையில் செங்கோட்டையனுக்கு பிடித்ததுபோல பதில் சொல்வேன் என்று அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

சட்டசபை கூட்டத்தொடரின் நேற்றைய கேள்வி-பதில் நேரத்தின்போது முன்னாள் அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினருமான செங்கோட்டையன் கேள்வி எழுப்பி பேசினார். அப்போது பேசிய அவர், ஈரோடு முதல் கோபி செட்டிபாளையம் வரையில் நான்கு வழிச்சாலை விரிவுபடுத்தப்பட்டன. கோபி நகரத்திற்குள் நெரிசல் அதிகமாக ஏற்படுகின்ற காரணத்தின் அடிப்படையில் எங்களது ஆட்சி காலத்தில் புறவழிச்சாலை அமைக்க ஆய்வு பணிகள் மேற்கொண்டு நிதி ஒதுக்கப்படும் சமயத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து அமைச்சர் இடத்தில் நான்கு முறை கேட்கின்ற போது, அந்த பகுதிக்கு நான் வந்திருக்கிறேன். உடனடியாக செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என போன நிதியாண்டில் சொன்னார். ஆனால் அந்த பணிகள் நிறைவேற்றப்படவில்லை. எனவே அந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முன்வருமா? என கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்து பேசிய அமைச்சர் எ.வ.வேலு, "கோபிசெட்டிபாளையத்தை பொறுத்த வரை அங்கு மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ளது. உறுப்பினரும் கோரிக்கை வைத்திருக்கிறார். இது தொடர்பாக மானிய கோரிக்கையின் போது அவருக்கு பிடித்த மாதிரி பதில் சொல்கிறேன்'' என்று கூறினார்.

# அ.தி.மு.க. தீர்மானத்துக்கு செங்கோட்டையன் ஆதரவு

**சென்னை, மார்ச் 18-**

பேரவைத் தலைவர் மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு செங்கோட்டையன் ஆதரவு தெரிவித்துள்ளார். தமிழக சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடர் மார்ச் 14 அன்று தொடங்கி நடைபெற்று வருகிறதுநேற்றுகாலை சட்டப்பேரவை 9.30 மணிக்கு கூடியது. பேரவைத் தலைவர் அப்பாவு மீது அதிமுக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவந்துள்ள நிலையில் அதுகுறித்த விவாதம் மற்றும் வாக்கெடுப்பு நடைபெற்றது.

இதுதொடர்பான ஆலோசனைக் கூட்டம் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்றது. இதில், அ.தி.மு.க. வினர் பலர் கலந்துகொண்ட நிலையில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் பங்கேற்கவில்லை.

பட்ஜெட் தாக்கலுக்கு முன்பு நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திலும் செங்கோட்டையன் பங்கேற்கவில்லை.

அதுமட்டுமின்றி 3 நாட்களுக்கு முன் பேரவைத் தலைவர் அப்பாவுவை தனியே சந்தித்துப் பேசினார்.

முன்னதாக சட்டப்பேரவைக் கூட்டம் தொடங்கியதும் கடம்பூர் ராஜு செங்கோட்டையனிடம் பேசிக் கொண்டிருந்தார். செங்கோட்டையனின் வாக்கு முக்கியமானதாகக் கருதப்படும் நிலையில் அவருடன் அ.தி.மு.க. நிர்வாகிகள் சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தனர். இந்த நிலையில், பேரவைத் தலைவர் மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு செங்கோட்டையன் ஆதரவு தெரிவித்துள்ளார்.

# பாலாற்றின் குறுக்கே ரூ.70 கோடியில் தடுப்பணை: அமைச்சர் துரைமுருகன்

**சென்னை, மார்ச் 18-**

வெண்கோடி அருகே பாலாற்றின் குறுக்கே ரூ.70 கோடியில் தடுப்பணை அமைக்க திட்டம் உள்ளதாக அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார். தமிழக அரசின் 2025-26-ம் ஆண்டிற்கான பட்ஜெட்டை, சட்டசபையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கடந்த வெள்ளிக்கிழமை தாக்கல் செய்தார். மறுநாள் வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிலையில் நேற்று சட்டசபையில் பட்ஜெட் மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. இன்றைய வினாக்கள் விடைகள் நேரத்தில், வெண்கொடி அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா என உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சுந்தர் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்து பேசிய நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், வெண்குடியில் தடுப்பணை கட்ட வேண்டியது அவசியம் தான் என்றும் ரூ.70 கோடியில் 1,600 மீட்டர் நீளத்தில் தடுப்பணை அமைக்க திட்டம் உள்ளதாக கூறினார்.

மேலும், தடுப்பணை கட்டினால் 12 கிராம ஆழ்துளை கிணறுகளின் நீர்மட்டம் உயரும் என கூறிய அவர் 2,400 ஏக்கர் விவசாய நிலம் பயனடையும் எனவும், எனவே நிதி நிலைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் வெண்குடியில் தடுப்பணை கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

# மதுவுக்கு எதிராக யார் போராடினாலும் வரவேற்போம்: திருமாவளவன் பேட்டி

**சென்னை, மார்ச் 18-**

டாஸ்மாக்குக்கு எதிராக பாரதிய ஜனதா கட்சியினர் நடத்தும் போராட்டத்தை வரவேற்பதாக விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் உள்ள டாஸ்மாக் அலுவலகம் மற்றும் மதுபான ஆலைகளில் நடத்திய சோதனையில் சுமார் ரூ. 1,000 கோடி ஊழல் நடந்திருப்பதாக அமலாக்கத்துறை அறிக்கை வெளியிட்டிருந்தது. இந்த ஊழலை கண்டித்து சென்னை எழும்பூரில் உள்ள டாஸ்மாக் தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தப்படும் என்று பா.ஜ.க. அறிவித்திருந்தது.

இதனிடையே, அனுமதி அளிக்காத போராட்டத்துக்குச் சென்ற பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை, தமிழிசை சௌந்தரராஜன், வானதி சீனிவாசன் உள்ளிட்ட நிர்வாகிகள், தொண்டர்களை காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இந்த நிலையில் செய்தியாளர்களை சந்தித்த திருமாவளவனிடம் பா.ஜ.க. போராட்டம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, மதுவுக்கு எதிராக பா.ஜ.க. நடத்தும் போராட்டத்தை வரவேற்கிறேன்,

மதுவுக்கு எதிராக யார் போராட்டம் நடத்தினாலும் வரவேற்போம் எனத் தெரிவித்தார்.

மேலும், "கூட்டணிக் கட்சியாக இருந்தாலும் மது ஒழிப்பு வாக்குறுதியை நிறைவேற்ற தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். மதுபானக் கடைகளை மூடப்பட வேண்டும் என்பது எங்கள் நிலைப்பாடு. அரசியல் காரணங்களுக்காக பா.ஜ.க. வினர் போராட்டம் நடத்தினால், அவர்களால் எந்த முன்னேற்றமும் காண முடியாது. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் மதுவிலக்கு அமலில் இருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது. அந்த மாநிலங்களில் மது ஒழிப்பை அமல்படுத்தினால் வரவேற்று பாராட்டலாம்'' எனத் தெரிவித்தார்.

# ஜார்க்கண்டில் வைக்கோல் படப்பு தீப்பிடித்து 4 சிறுவர்கள் பரிதாபமாக உயிரிழப்பு

**ஜார்க்கண்ட், மார்ச் 18-**

ஜார்க்கண்ட், மாநிலம், மேற்கு சிங்பூம் மாவட்டத்தில் உள்ள வீட்டிற்கு அருகிலிருந்த வைக்கோல் படப்பு திடீரென தீப்பிடித்தது.

இந்த தீ விபத்தில் நான்கு சிறுவர்கள் கருகி பலியானதாக போலீஸார் தெரிவித்தனர். சாய்பாசாவில் உள்ள ஜகன்னாத்பூர் காவல் நிலையப் பகுதியில் உள்ள கிதிலிபி கிராமத்தில் காலை 11 மணியளவில் இந்த சம்பவம் நடந்ததாக அவர்கள் கூறினர். விரிவான விசாரணைக்காக சம்பவ இடத்திற்கு ஒரு குழு அனுப்பப்பட்டுள்ளது என்று காவல் கண்காணிப்பாளர் அசுதோஷ் சேகர் பிடிஐயிடம் தெரிவித்தார்.

தீ விபத்து ஏற்பட்ட போது குழந்தைகள் வைக்கோல் படப்புக்கு அருகில் விளையாடிக் கொண்டிருந்தனர் என்றும் தீ விபத்துக்கான சரியான காரணம் கண்டறியப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தமிழக அரசு, ஆவின் நிறுவன வளர்ச்சியை கவனத்தில் கொண்டு பால் விநியோகிக்கும், பால் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவையில் உள்ள 120 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட ஊக்கத்தொகையை உடனடியாக வழங்கி, சுமார் 8 லட்சம் விவசாயிகளின் நலனைக் காக்க வேண்டும்.

- ஜி.கே.வாசன்



ஊழலுக்கு எதிரான போராட்டங்களைக் கண்டு அரசும் காவல்துறையும் அஞ்சுவது ஏன்? தமிழ்நாட்டில் ஊழலுக்கு எதிராக ஜனநாயக முறையில் போராடுவதற்கு கூட அனுமதி இல்லையா? திமுகவினர் ஊழல் செய்யவில்லை என்றால் இத்தகைய அடக்குமுறைகளை கைவிட்டு, டாஸ்மாக் ஊழல் குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு ஆணையிட வேண்டும்.

- அன்புமணி



தமிழ்நாட்டு மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு, ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் உடனே தலையிட்டு தமிழ்நாட்டு மாணவர்களுக்கான தேர்வு எழுதும் மையங்களை சென்னை, மதுரை, கோயமுத்தூர், திருநெல்வேலி ஆகிய மையங்களில் நடத்த ஏற்பாடு செய்து, மாணவர்களின் சிரமங்களை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- செல்வப்பெருந்தகை



மொழிக் கொள்கையில் உறுதியை காட்ட 'ரூ' போடத் தேவையில்லை. சுப்ரீம் கோர்ட்டில் நிலுவையில் உள்ள வழக்கை முடிவுக்குக் கொண்டு வந்து தமிழைக் கட்டாயப்பாடமாக்க வேண்டும். பள்ளி இறுதிவகுப்பு வரை தமிழைப் பயிற்றுமொழியாக்க நடப்புச் சட்டசபை கூட்டத் தொடரில் சட்டம் இயற்ற வேண்டும்.

- ராமதாஸ்

# சென்னையில் போதை பொருட்கள் இல்லா தமிழ்நாடு என்ற விழிப்புணர்வு பிரச்சார வாகனம் கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே துவக்கி வைத்தார்




சென்னை மார்ச் 18-

சென்னை மாவட்டம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை இயக்க மேலாண்மை அலகின் ''போதை பொருட்கள் இல்லா தமிழ்நாடு'' என்ற விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஷ்மி சித்தார்த் ஜகடே, கொடியசைத்து துவக்கி வைத்தார்.

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை இயக்க மேலாண்மை அலகின் மூலம் "போதைப் பொருட்கள் இல்லா தமிழ்நாடு" எனும் கருத்தை மையமாகக் கொண்டு போதைப் பொருட்களுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பிரச்சார வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் . ரஷ்மி சித்தார்த் ஜகடே நேற்று கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்த பிரச்சார வாகனம் சென்னை மாவட்டத்தில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் காட்சிப்படுத்தப் படவுள்ளது. அதுசமயம், போதைப் பொருட்களுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தும் துண்டு பிரசுரங்களும் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

மேலும், போதைப் பொருட்கள் மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் நடமாட்டம் குறித்து தங்களுடைய சுய விபரங்களின்றி புகார் செய்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு அரசால் மொபைல் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த செயலியின் சிறப்பு என்னவென்றால் போதைப் பொருட்கள் விற்பனை குறித்த விபரங்களை தெரிவிப்பவரின் தகவல் கோரப்படாது. இந்த செயலி மிகவும் பாதுகாப்பானது. இதனை மாணவர்கள் கண்டிப்பாக தங்களுடைய அலைபேசி மற்றும் பெற்றோர்களின் அலைபேசியில் பதிவிறக்கம் செய்து கொண்டு போதை பொருட்கள் பயன்பாடு தொடர்பான புகார்களை தெரிவிக்கலாம்.

போதைப்பொருட்கள், பான், குட்கா, கஞ்சா, சட்டவிரோத சாராயம் உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்வோர் அல்லது பயன்படுத்துவோர் குறித்து உங்களுக்கு தகவல் தெரிந்தால் இந்த மொபைல் செயலியில் அவர்கள் பற்றிய தகவல்களையும், புகைப்படங்கள் உள்ளிட்ட ஆவணங்கள் இருந்தால் அவற்றையும் பதிவேற்றம் செய்தால் உடனடியாக சென்னையில் உள்ள கட்டுப்பாட்டு அறையில் இருந்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு போர்க்கால அடிப்படையில் போதைப் பொருட்களின் பயன்பாடு தடுத்து நிறுத்தப்படும்.

முன்னதாக, "போதைப் பொருட்கள் இல்லா தமிழ்நாடு" எனும் கருத்தை மையமாகக் கொண்டு போதைப் பொருட்களுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேசுதல் இன்றி கை மற்றும் உடல் இயக்கங்களாலும் முகக் குறிப்புகளால் நடித்துக் காட்டும் மைம் என்ற கலை நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஷ்மி சித்தார்த் ஜகடே. பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் கலால் துணை ஆணையர் (ஆயத்தீர்வை) கு.பிரேம்குமார் உட்பட பல்வேறு அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை நுங்கம்பாக்கத்தில் எம்.ஓ.பி. வைணவ மகளிர் கல்லூரியின் சார்பில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ள சென்னை மாநகராட்சி பூங்கா: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்



சென்னை,மார்ச்.18

தமிழ்நாடு துணை முதலமைச்சர்உதயநிதி ஸ்டாலின் சென்னை நுங்கம்பாக்கத்தில் எம்.ஓ.பி. வைணவ மகளிர் கல்லூரியின் சார்பில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காவினை திறந்து வைத்து பார்வையிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் (17.3.2025) சென்னை நுங்கம்பாக்கத்தில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் எம்.ஓ.பி. வைணவ மகளிர் கல்லூரியின் சார்பில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காவினை திறந்து வைத்து பார்வையிட்டார்.

**உடற்பயிற்சி**

தமிழ்நாட்டின் அடிப்படைக் கட்டமைப்புகளின் மேம்பாட்டில் அரசுடன் பொதுமக்களும், தனியார் நிறுவனங்களும் பங்கேற்க வேண்டும் என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தொலைநோக்கு சிந்தனையால் உதித்த திட்டம்தான் ''நமக்கு நாமே திட்டம்''. இத்திட்டத்தின் கீழ் பொதுமக்களின் பங்களிப்பு ஒரு பங்கு என்றால், தமிழ்நாடு அரசின் பங்களிப்பு இரண்டு பங்காக இருக்கும். அதனடிப்படையில் தமிழ்நாட்டில் பொதுமக்களின் விருப்பத்திற்கு ஏற்ப, பல்வேறு உள்கட்டமைப்பு பணிகள் பொதுமக்களின் பங்களிப்புடன் அரசின் 2 பங்கு நிதியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டினை அனைத்து வகையிலும் முதலாவது மாநிலமாக உருவாக்க திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகின்றார்கள். சென்னையை சிங்காரச் சென்னையாக உருவாக்கிட பூங்காக்கள், பல்வேறு வகையான பாலங்கள், சாலைகள், உடற்பயிற்சி கூடங்கள், விளையாட்டு மைதானங்கள், மெட்ரோ ரயில் என பல்வேறு வசதிகளை மக்களுக்காக செயல்படுத்தி வருகின்றார்கள்.

முதலமைச்சர் முயற்சிகளுக்கு துணை நிற்கும் வகையில் நுங்கம்பாக்கம் எம்.ஓ.பி. வைணவக் கல்லூரி அருகிலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காவை கல்லூரியை சுற்றியுள்ள பொதுமக்கள், குழந்தைகள் மற்றும் கல்லூரியின் மாணவிகள் பயன்படுத்திடும் வகையில், எம்.ஓ.பி. வைணவக் கல்லூரியின் சார்பில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 100 சதவீத முழுப் பங்களிப்பில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேம்படுத்தியுள்ளனர்.

அதனடிப்படையில் இந்த பூங்காவில் குழந்தைகளுக்கான விளையாட்டு பகுதி, பெரியவர்களுக்கான உடற்பயிற்சி பகுதி, நடைபாதை, இருக்கைகள், 35 நபர்கள் அமர்ந்து பார்வையிடும் வகையில் அமைக்கப்பட்ட கலை மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளுக்கான திறந்தவெளி சிறுகலையரங்கம், மழைநீர் சேகரிப்பு தொட்டி, ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கழிப்பறைகள், உலர் கழிவுகளை உரமாக்கும் வசதிகள் மேற்கொள்ளப்பட்டு, சிசிடிவி கண்காணிப்பு, 24 மணி நேர பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேலும் இந்த பூங்காவின் பராமரிப்பு பொறுப்பையும் கல்லூரியே ஏற்றுக் கொண்டுள்ளது.

மேலும் இக்கல்லூரி மேற்கொண்டுள்ள மரம் நடும் திட்டத்தின் கீழ் கல்லூரிக்கு வருகை தரும் விருந்தினர்களுக்கு மலர்மாலைக்கு பதிலாக 'மரம் சான்றிதழ்' வழங்குவதுடன், வருகை தந்த விருந்தினரின் பெயரில் ஒரு மரத்தை நட்டு, பராமரித்து வருகின்றது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை சிறப்பித்து கல்லூரியின் முதல்வர் ''மரம் சான்றிதழை'' வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்கே. என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர். நா.எழிலன், துணை மேயர் மு.மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே. சிற்றரசு, எம்.ஓ.பி. வைணவ கல்லூரி முதல்வர் முனைவர் அர்ச்சனா பிரசாத், துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., மத்திய வட்டார ஆணையர் கே.ஜெ.பிரவீன்குமார், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர் திருமதி.நந்தினி உள்பட கல்லூரி மாணவிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சென்னையில் இஸ்ரோ தலைவருக்கு பாராட்டு



சென்னை மார்ச் 18-

இஸ்ரோ தலைவர் விஞ்ஞானி வி.நாராயணனுக்கு அனைத்து சமுதாயங்களின் கூட்டமைப்பின் சார்பாக பாராட்டு விழா சென்னை டிஜி வைஷ்ணவா கல்லூரியில் நடைபெற்றது. இந்திய நாடார்கள் பேரமைப்பின் சார்பில் நிறுவனத் தலைவர் ராகம் சௌந்தர பாண்டியன் விஞ்ஞானி வி.நாராயணனுக்கு ஆளுயற மாலை அணிவித்து கௌரவித்தார். இந்த நிகழ்ச்சியில், ராகம் சௌந்தரபாண்டியன் விஞ்ஞானி வி நாராயணன் நாடார் சமுதாயத்தில் மிக எளிய குடும்பத்தில் பிறந்து இன்று இந்த உயரிய பதவிக்கு வந்திருப்பதை தனது சமுதாயத்திற்கு கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரம் என்றும் இது அவரது கடின உழைப்புக்கு கிடைத்த வெற்றி என்றும் தெரிவித்தார். இந்த உயரிய பதவியில் வி நாராயணனை நியமித்த இந்திய குடியரசுத் தலைவர் அவர்களுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கும் என்றென்றும் எங்களது நன்றிகள் எனவும் தெரிவித்தார்.இந்தப் பாராட்டு விழாவில் நிறுவனத் தலைவர் ராகம் மா.சௌந்தரபாண்டியன் இந்திய நாடார்கள் பேரமைப்பின் மாநில வியாபாரிகள் முன்னேற்ற அணி தலைவர் ஆர்.மாதவன். மாநில வியாபாரிகள் முன்னேற்ற அணி துணைத் தலைவர் டி. ஆர்.பி.வெங்கட்ராமன். மாநில தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் டி.ரமேஷ். வடசென்னை கிழக்கு மாவட்ட தலைவர் ஆர் வெங்கடேசன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# யானைகவுனி பகுதியில் பணம் மற்றும் செல்போனை திருடியவர் கைது

. சென்னை மார்ச் 18-

சென்னை, சௌகார்பேட்டை, முல்லா தெருவில் வசித்து வரும் அருள், என்பவர் டெக்கரேஷன் வேலை செய்து வருகிறார்.

அருள் கடந்த 13 ந் தேதி அன்று இரவு, மேற்படி அவரது வீட்டில் தூங்கி மறுநாள் காலை எழுந்து பார்த்தபோது, அவர் பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.26,000/- மற்றும் அவரது செல்போன் திருடு போனது தெரியவந்தது.

இது குறித்து அருள், யானைகவுனி காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

யானைகவுனி காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட தினேஷ் (எ) தினேஷ்குமார், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் செல்போன் மற்றும் பணம் ரூ.8,500/- மீட்கப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட தினேஷ் (எ) தினேஷ்குமார் என்பவர் மீது ஏற்கனவே 1 கஞ்சா வழக்கு, 2 திருட்டு வழக்குகள் என 3 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது

கைது செய்யப்பட்ட எதிரி தினேஷ் (எ) தினேஷ்குமார் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.



**சென்னை வேப்பேரி போலிஸ் கமிஷ்னர் அலுவலகத்தில் நேற்றுசிறப்பாகபணிபுரிந்துகுற்றவாளிகளுக்கு4ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றுத்தர சீரிய பணியாற்றிய மத்திய குற்றபிரிவு உதவி ஆணையர் என்.கண்ணனை நேரில் அழைத்து பாராட்டி வெகுமதி வழங்கினார்**

# மதுரவாயல் மற்றும் தேனாம்பேட்டை பகுதிகளில் வழிப்பறி இருவர் கைது

சென்னை மார்ச் 18-

சென்னை, வானகரம், போரூர் கார்டன் பகுதியில் வசித்து வரும் இசக்கி, என்பவர் பழைய இரும்பு கடை வைத்து தொழில் செய்து வருகிறார். இவர் நேற்று முன்தினம் காலை மதுரவாயல், ஆலப்பாக்கம் ரோட்டில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, அவரை 2 பேர் வழிமறித்து, தகாத வார்த்தைகள் பேசி, கத்தியைக் காட்டி மிரட்டி, அவர் சட்டைப்பையில் வைத்திருந்த பணம் ரூ.1,000/- மற்றும் ஒரு செல்போனை பறித்துக் கொண்டு, தப்பிச் செல்ல முற்பட்டபோது, இசக்கி சத்தம் போடவே, மேற்படி 2 நபர்களும் சேர்ந்து அருகிலிருந்த கடையில் இருந்து கூல்ரிங்ஸ் பாட்டில்கள் மற்றும் கீழே கிடந்து கற்களை எடுத்து வீசி, அங்கிருந்து இருசக்கர வாகனத்தில் தப்பிச் சென்றனர்.

இது குறித்து இசக்கி, மதுரவாயல் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்தனர்.

**வழிப்பறி**

மதுரவாயல் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.அஜய், 2.சஞ்சய், ஆகிய 2 பேர் கைது செய்தனர். விசாரணையில் மேற்படி இருவரும் தேனாம்பேட்டை மற்றும் அம்பத்தூர் பகுதிகளில் செயின் பறிப்பு சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதும் தெரியவந்தது. அவர்களிடமிருந்து 37 கிராம் எடை கொண்ட தங்க நகைகள், பணம் ரூ.1,000/-, 1 செல்போன் மீட்பு. மற்றும் குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம் மற்றும் 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி அஜய் மீது, ஏற்கனவே கஞ்சா உட்பட 3 குற்ற வழக்குகளும், எதிரி சஞ்சய் மீது 1 திருட்டு வழக்கு உள்ளதும் தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# தள்ளுவண்டி கடைக்காரரிடம் கத்தியை காட்டி, மிரட்டி பணம் பறித்த இருவர் கைது

சென்னை மார்ச் 18-

சென்னை, பெரம்பூர், ஏழுமலை தெருவில் வசித்து வரும் அருண், என்பவர் தள்ளுவண்டியில் காய்கறி வியாபாரம் செய்து வருகிறார். இவர் 16. ந் தேதியன்று காலை, குமரன் நகர் பேருந்து நிறுத்தம் அருகில் தள்ளு வண்டியில் காய்கறி வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த 2 பேர் , மேற்படி அருணை தகாத வார்த்தைகள் பேசி, மது அருந்த பணம் கேட்டுள்ளனர். அருண் பணம் தர மறுக்கவே, அவரை கத்தியை காட்டி மிரட்டி, சட்டைப்பையில் வைத்திருந்த பணம் ரூ.1,000/- பறித்துக் கொண்டு, கொலை மிரட்டல் விடுத்து தப்பிச் சென்றனர். இது குறித்து அருண், வி.க நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்தனர்.

வி.க நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட 1.கார்த்திகேயன், 2.கோபி (எ) கமலக்கண்ணன், ஆகிய 2 பேர் கைது செய்தனர். அவர்களிடமிருந்து குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய 1 கத்தி மற்றும் பணம் ரூ.200/- பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி கோபி (எ) கமலக்கண்ணன் என்பவர் வி.க நகர் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே 2 கொலை, கொலைமுயற்சி, கொள்ளை, அடிதடி என 18 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

# தமிழக முதல்வர் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு இதுவரை 85 திருக்கோயில்களுக்கு சுமார் 347 கோடி ரூபாய் செலவில் திருமண மண்டபங்கள் கட்டப்படுகின்றன

## சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்

**சென்னை,மார்ச்.18-**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் (17.03.2025) வினா - விடை நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி. கே.சேகர்பாபு திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன், போடிநாயக்கனூர் சட்டமன்ற உறுப்பினர்ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார். சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் : திருவாலங்காடு, அருள்மிகு வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் கட்ட அரசு முன்வருமா? அமைச்சர் : , திருவாலங்காடு, அருள்மிகு வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில் என்பது பஞ்ச சபைகளில் ஒன்றான ரத்ன சபை என்று அழைக்கப்படுகின்ற திருக்கோயிலாகும். காரைக்கால் அம்மையார் இல்லற வாழ்வை துறந்து துறவியாக முக்தி பெற்ற திருக்கோயில் என்பதால் ஐதீகப்படி திருமணம் போன்ற சுப காரியங்கள் இந்த திருக்கோயிலை மையப்படுத்தி நடத்துவதில்லை. ஆகவே சுப நிகழ்ச்சிகள் நடத்திடாத சூழ்நிலையில் திருமண மண்டபம் அங்கு கட்ட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் முதல்வர் அவர்களை வணங்கி என்னுடைய திருவள்ளூர் தொகுதியிலேயே இருக்கின்ற திருவாலங்காடு, வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயில் எத்தகைய சிறப்பு வாய்ந்தது என்பதை பற்றி அமைச்சர் நன்றாக விவரித்தார். பஞ்ச சபைகளில் ஒன்றான ரத்தின சபை திருக்கோயில் மாந்திரீக பூஜை நடத்துவதற்கு உண்டான இடம். தமிழ்நாடு முழுவதும் இருக்கக் கூடிய மக்கள் சனிக்கிழமை வந்து மாந்திரீக பூஜை நடத்துகிறார்கள். அதற்கு கோயிலில் சிறிய இடம் தான் இருக்கிறது.

சிவராத்திரி, ஆருத்ரா தரிசனம், பிரதோஷம் போன்ற நாட்களில் இங்கு வரக்கூடிய பக்தர்கள் தங்கக்கூடிய அளவிற்கு தங்கும் வசதி ஏற்படுத்தி தரும் வகையில் விடுதி ஒன்று அமைத்திட வேண்டும். அதனை முதல்வர் அனுமதி பெற்று அமைச்சர் ஆலோசித்து செய்வார் என நம்புகிறேன். அது மட்டுமில்லாமல் அந்த கோயிலுக்கு போகின்ற வழியில் NH205ல் திருப்பாச்சூர் சிவன் கோயில் இருக்கிறது.

அங்குள்ள குளத்தினை முதலமைச்சர் எதிர்க்கட்சி தலைவராக இருந்தபோது சீரமைத்து தண்ணீர் நிரப்பிட அடிக்கல் நாட்டி பணிகளை செய்தோம். திருப்பதிக்கு செல்கின்ற வழியாக உள்ளதால் அந்த பகுதியில் கழிப்பிட வசதி மற்றும் மண்டபம் அமைத்து தர வேண்டும் என கேட்டு அமைகிறேன்.அமைச்சர் : பேரவை தலைவர் அவர்களே, அவரது கேள்வி என்பது திருமண மண்டபம் என்று இருந்ததால் அதற்கான பதிலை நான் சொன்னேன். உறுப்பினர் தற்போது மற்ற காரியங்கள் செய்வதற்காக மண்டபம் வேண்டுமென கேட்டிருக்கின்றார். உடனடியாக துறை அலுவலர்களை அனுப்பி ஆய்வு செய்து வாய்ப்பு இருந்தால் நிச்சயம் ஏற்படுத்தி தரப்படும். மகாசிவராத்திரி விழா என்பது கட



ந்த காலங்களில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடத்தப்படாத நிலையில் வரலாற்றை மாற்றி அமைத்து 9 திருக்கோயில்கள் சார்பில் மகா சிவராத்திரி விழா நடத்திய பெருமை திராவிட மாடல் ஆட்சியையே சேரும். அந்த திருக்கோயில்களில் ஒன்றான திருவாலங்காடு, அருள்மிகு வடாரண்யேஸ்வரசுவாமி திருக்கோயிலில் இந்தாண்டு மகாசிவராத்திரி விழா சிறப்பாக நடத்தப்பட்டது. அதேபோல் முக்தி பெற்ற காரைக்கால் அம்மையாருக்கு சிறப்பு விழா நடத்துவதற்கு ஏற்கனவே சட்டமன்ற அறிவிப்பு செய்திருந்தோம். அந்த விழாவும் இந்த மாதம் நடைபெறுகிறது. திருப்பாச்சூர் திருக்கோயில் குளமானது பஞ்சாயத்திற்கு சொந்தமான குளமாகும். ஆகவே நீங்கள் உள்ளாட்சி அமைப்பின் மூலம் அந்த குளத்தை மேம்படுத்திக் கொள்ளலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் : பேரவை தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அவர் தங்கும் விடுதி கட்டித் தரப்படுமா என்பதை சொல்லவில்லை. நிச்சயமா இந்த பட்ஜெட்டில் அறிவிப்பார் என்று நம்புகிறேன். கடம்பத்தூர் ஒன்றியம் நரசிங்கபுரம் ஊராட்சியில் லட்சுமி நரசிம்மர் திருக்கோயில் இருக்கிறது. அதற்கு உபயதாரர்கள் முன்வந்து பணிகளை செய்கிறேன் என்று ஒப்புக் கொண்டுள்ளனர். எட்டு மாதமாக பணிகள் நடைபெறவில்லை.

அதனை மாற்றி வேறு உபயதாரர்கள் மூலமாகவோ, அல்லது அரசே ஏற்று அந்த பணிகள் நடைபெறுமா என்பதனையும், மாதம்தோறும் சுவாதி நட்சத்திரத்தன்று பல்லாயிரக்கணக்கான மக்கள் வருகைதரும் அந்த திருக்கோயிலுக்கு சொந்தமான குளத்தை சீர் செய்து அங்கு சுற்றுச்சுவர் மற்றும் கழிப்பிடங்கள் கட்டித் தரப்படுமா என்பதைக் கேட்டு அமைகிறேன். அமைச்சர் : பேரவை தலைவர் அவர்களே, உறுப்பினர் கூறிய அருள்மிகு லட்சுமி நரசிம்மர் திருக்கோயிலில் 25 லட்ச ரூபாய் செலவில் உபயதாரர் பணியை மேற்கொண்டு இருந்தார்.

உடல்நிலை சரியில்லாததால் இடையில் அந்த பணி தடை ஏற்பட்டது உண்மை தான். தற்போது அந்த பணி விரைவுபடுத்தப்பட்டு 80 சதவீத பணி நிறைவடைந்து இருக்கின்றது. இரண்டு மாதத்திற்குள்ளாக குடமுழுக்கை நிச்சயம் நிறைவேற்றி தருவோம். அதே வேளையில் திருக்குளத்தை சீரமைக்க மண்டல குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு, மாநில வல்லுநர் குழு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு இருக்கின்றது. வெகுவிரைவில் ஒப்பந்தம் கோரப்பட்டு அந்த குளம் சீரமைத்து தரப்படும். உறுப்பினர் கோரிய திருமண மண்டபமானது ஐதீக முறைப்படி அங்கே கட்ட முடியாத நிலை உள்ளதைதான் சொன்னேன். கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்ற வாசகத்திற்கு பொருத்தமான இந்த ஆட்சியில் அவர் கோரிய மண்டபத்திற்கான பணிகளை மேற்கொள்வதற்கு உண்டான அனைத்து முயற்சிகளையும் துறை மேற்கொள்ளும். தமிழக முதல்வர் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு இதுவரை 85 திருக்கோயில்களுக்கு சுமார் 347 கோடி ரூபாய் செலவில் திருமண மண்டபங்கள் கட்டப்படுகின்றன. இந்து சமய அறநிலையத் துறை வரலாற்றில் இல்லாத அளவிற்கு திருமண மண்டபங்களை அதிகளவு கட்டித் தருகின்ற ஆட்சியாக இந்த ஆட்சி திகழ்ந்து கொண்டிருக்கின்றது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 4.20 கோடி ரூபாய் செலவில் நான்கு புதிய திருக்குளங்கள் உருவாக்கப்பட்டு வருவதோடு, ரூ.120 கோடி மதிப்பீட்டில் 220 திருக்குளங்கள் புனரமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

200 ஆண்டுகளை கடந்தும் தெப்பத் திருவிழாக்கள் நடைபெறாமல் இருந்த நாமக்கல் போன்ற திருக்கோயில்களில் தெப்ப திருவிழா நடந்தப்பட்டதன் காரணமாக இறையன்பர்கள், அந்தந்த பகுதியை சேர்ந்த மக்கள் அரசுக்கும், தமிழக முதல்வருக்கும் நன்றி தெரிவித்தனர். அந்த வகையில் உறுப்பினர் கூறிய கோரிக்கை முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று வாய்ப்பிருப்பின் நிச்சயம் நிறைவேற்றி தரப்படும் என்று உறுதியை தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் ஓ.பன்னீர்செல்வம் : பேரவை தலைவர் அவர்களே, உறுப்பினர் விஜி ராஜேந்திரன் அவருடைய கேள்விக்கு பதில் பெற அமைச்சர் அவர்களும் சில விளக்கங்களை கேட்டார். அவர் கேள்வி கேட்கின்ற போது மாந்திரீக பூஜை பற்றி சொன்னார்.

மாந்திரீக பூஜை என்றால் என்ன என்று என்பதற்கு அமைச்சர் தக்க விளக்கத்தை அளிப்பாரா என்பதை கேட்க விரும்புகிறேன். அமைச்சர் : பேரவை தலைவர் அவர்களே, அவரும் ஆன்மீகவாதி. நீண்ட நெடிய படிக்கட்டுகளில் பல திருக்கோயில்களில் அவரது எண்ணங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக சுற்றி சுற்றி வருபவர். அவருக்கு தெரியாதது ஒன்றும் அல்ல. மாந்திரீகம் என்ற ஒரு வார்த்தை இந்த ஆட்சியில் திராவிட மாடல் ஆட்சியில் எங்கும் நடைபெறுவதில்லை. பரிகார பூஜையை தான் அவர் மாந்திரீக பூஜை என்று மாற்றி சொல்லி விட்டார். பரிகார பூஜை மண்டபம் தான் கேட்டார்.

அந்த பரிகார பூஜை மண்டபம் ஏற்படுத்தி தரப்படும் என்பது முன்னாள் முதல்வர், சட்டப்பேரவை உறுப்பினர், அருமை அண்ணன் பன்னீர்செல்வம் அவர்களுக்கும் உறுப்பினர் ராஜேந்திரன் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

# ஊட்டி மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்கள்

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார்



ஊட்டி, மார்ச் 18-

ஊட்டி மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமை தாங்கி பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா, முதியோர், விதவை, கல்வி உதவி தொகை, வங்கி கடன், சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 171 மனுக்களை பெற்றுக் கொண்டார்.

பின்னர் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட கலெக்டர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து இக்கூட்டத்தில், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில், கடந்த 18.02.2025 அன்று நடைபெற்ற கலைத் திருவிழா என்ற பெயரில் விடுதியில் தங்கி கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு நடத்தப்பட்ட ஓட்டப்பந்தயம், நீளம் தாண்டுதல், பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப்போட்டிகளில், வெற்றிபெற்ற முதல், இரண்டாவது மற்றும் மூன்றாம் இடத்தை பிடித்த 27 மாணாக்கர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி கலெக்டர் பாராட்டினார். மேலும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் குந்தா, குன்னூர் மற்றும் கூடலூர் ஆகிய வட்டாட்சியர்களின் பயன்பாட்டிற்கு 3 புதிய வாகனங்களுக்கான சாவிகளை, வாகன ஓட்டுநர்களிடம் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மா.நாராயணன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சுரேஷ்கண்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) கண்ணன் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



**ஊட்டி மாரியம்மன் திருக்கோயிலின் சித்திரை தேர்திருவிழாவின் முதல் நாள் நிகழ்ச்சியாக, நீலகிரி மாவட்ட ஒக்கலிக சங்கம் சார்பில் நடைபெற்ற திருவீதி உலாவில், அம்மன் பூப்பல்லக்கில், புலி வாகனத்தில் ஆதிபராசக்தியாக வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.**



**கோத்தகிரி உட்கோட்டத்திற்கு உட்பட்ட கட்டபெட்டு முதல் நடுஹட்டி வரை செல்லும் மாநில நெடுஞ்சாலையில், எதிரேவரும்வாகனம்தெரியாதவகையில்போக்குவரத்திற்கு இடையூறாக சாலையின் இருபுறமும் வளர்ந்திருந்த மரக்கிளைகள், செடி, கொடிகளை இயந்திரம் மூலம் நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர்களால் வெட்டி அகற்றும் பணி நடைபெற்று வருகிறது.**

ஊட்டியருகே

# சிறுத்தை உலா: கலெக்டரிடம் கிராம மக்கள் மனு

ஊட்டி, மார்ச்.18-

ஊட்டி அருகே சிறுத்தை தாக்கி பெண் உயிரிழந்த பகுதியில் மீண்டும் சிறுத்தை உலா வருவதாக கிராம மக்கள் குற்றம் சாட்டி கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளனர்.

நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகேயுள்ள அரக்காடு காலிபெட்டா பகுதியில் கடந்த 13-ந் தேதி சிறுத்தை தாக்கி அஞ்சலை (வயது 50) என்ற தேயிலை தோட்ட பெண் தொழிலாளி உயிரிழந்தார். இதனால் தேயிலை பறிக்க செல்லும் நூற்றுக்கும் மேற்பட்ட தேயிலை தோட்ட தொழிலாளர்கள் மிகுந்த அச்சமடைந்தனர். இதையடுத்து சிறுத்தையை கண்காணிக்க 30-க்கும் மேற்பட்ட இடங்களில் கண்காணிப்பு கேமராக்களை வனத்துறையினர் பொருத்தினர்.

கடந்த 14-ந் தேதியில் இருந்து பசுந்தேயிலையை பறிக்க யாரும் செல்ல வேண்டாம் என வனத்துறையினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க தொழிலாளர்கள் கடந்த 5 நாட்களுக்கும் மேலாக தேயிலை பறிக்கச் செல்லாமல் வீடுகளிலேயே முடங்கி உள்ளனர். இதனால் தேயிலைத் தோட்ட தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறியும், கடந்த 2 நாட்களாக அதே பகுதியில் சிறுத்தை நடமாடி வருவதை பார்த்திருப்பதாகவும் கூறி, அரக்காடு கிராம மக்கள் ஊட்டியில் நேற்று மாவட்ட கலெக்டரை நேரில் சந்தித்து மனு அளித்தனர். அப்போது கூறியதாவது:-

சிறுத்தை பெண்ணை கொன்று சாப்பிட்ட பகுதியில் வனத்துறையினர் கூண்டு வைத்துள்ளனர். ஆனால் கூண்டிற்குள் சிறுத்தை சாப்பிட ஆடு, கோழி போன்ற இறை ஏதும் வைக்கப்படாமல காலியாக உள்ளது. காலி குண்டு இருந்தால் சிறுத்தை எப்படி வரும். எனவே சிறுத்தையை பிடிக்க வனத்துறையினர் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் இவ்வாறு கூறினர்.

இது குறித்து வனத்துறையினர் கூறுகையில், சம்பவ இடத்தை சுற்றி வைக்கப்பட்டுள்ள நவீன கேமராக்களில் சிறுத்தை எதுவும் பதிவாகவில்லை. முதுமலையில் இருந்து 4 பழங்குடியினத்தை சேர்ந்த வனத்துறையினர் வரவழைக்கப்பட்டு கடந்த 5 நாட்களாக சிறுத்தையின் நடமாட்டத்தை கண்காணித்ததில் சுமார் 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் உள்ள அருவங்காடு பகுதியில் அந்த சிறுத்தை இடம் பெயர்ந்து சென்று இருப்பது தெரியவந்துள்ளது என்றனர்.

# அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான ஆண்கள் பூப்பந்து போட்டி



ஈரோடு மார்ச் 18-

அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான ஆண்கள் பூப்பந்து போட்டியானது மார்ச் 14 முதல் 16வரை பெங்களூரு நார்த் யூனிவர்சிட்டி சார்பாக ஹரிசான்பொறியல்மற்றும் தொழில்நுட்ப கல்லுரியில் போட்டிகள் நாக்அவுட் மற்றும் லீக் சுற்றும் முறையில் நடைபெற்றது

இப்போட்டிகளில் இந்தியா முழுவதிலும் உள்ள 79 பல்கலைக்கழக அணிகள் பங்கு பெற்றன.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கோவை பாரதியார் பல்கலைக்கழக ஆண்கள் பூப்பந்து அணியானது லீக் சுற்று போட்டிகளுக்கு தகுதி பெற்று சென்னை எஸ் ஆர் எம் பல்கலைக்கழக அணியை தோற்கடித்து மூன்றாவது இடம் பிடித்தனர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களையும் அணி மேலாளர் முனைவர். பெ. ஸ்ரீதர் பாரதியார் பல்கலைக்கழக தொலைதூர கல்வி உடற் கல்வி இயக்குனர் மற்றும் பாரதியார் பல்கலைக்கழக பூப்பந்து பயிற்சியாளர் போ. பாலமுருகன் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி மொடக்குறிச்சி உடற்கல்வி இயக்குனர் ஆகியோர்களையும் பாரதியார் பல்கலைக்கழக உடற்கல் துறை இயக்குனர் முனைவர் .எஸ் டி என் ராஜேஷ்வரன் மற்றும் உடற்கல்வித்துறை பேராசிரியர்கள் வரவேற்று வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

# சிறுதானியங்கள் பாரம்பரிய உணவுகள் குறித்து நாடக வடிவில் விழிப்புணர்வு



ஈரோடு மார்ச் 18-

உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையம் பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவிகளிடையே உணவு பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும்படி உத்திரவிட்டிருந்தது.

அதனடிப்படையில் தமிழ்நாடு சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை செயலர், தமிழக உணவு பாதுகாப்புத் துறை ஆணையர் மற்றும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோரது அறிவுரையின்படி ஈரோடு மாவட்டத்தில் மாநகராட்சி பகுதியில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடமான நகர பேருந்து நிலையம் மற்றும் மாநகராட்சி நடுநிலைப்பள்ளிகள் காவேரி ரோடு, ஆசிரியர் காலனி ஆகிய இடங்களில் பாரம்பரியமிக்க கலையான தெரு நாடகம் வாயிலாக சிறுதானிய உணவுகள், பராம்பரிய உணவுகள், செறிவூட்டப்பட்ட உணவுகள் ஆகியவற்றின் மகத்துவம் குறித்து அனைவரையும் கவரும் வகையில் நாடக நிகழ்ச்சி நடத்தப்பட்டது. அதில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், பிளாஸ்டிக் பயன்பாடு, உணவுப் பொருட்களை செய்தித்தாளில் சுற்றி விற்பனை செய்தல், ஒரு முறை பயன்படுத்தப்பட்ட எண்ணெய் வகைகளை திரும்ப பயன்படுத்துதல், செயற்கை வண்ணங்களை உணவில் சேர்க்கப்படுவது ஆகியவற்றால் பொது மக்களின் உடல் நலத்திற்கு ஏற்படும் தீங்குகள் குறித்தும் எடுத்துக் கூறப்பட்டது.அந்நிகழ்வின் போது உணவு பாதுகாப்பு தொடர்பான விளக்கங்களும் கலப்படங்களை கண்டறிவதற்கான எளிதான வழிமுறைகளும், உணவுப் பாதுகாப்புத்துறையின் நடமாடும் ஆய்வுக்கூட வாகனத்தின் மூலம் விளக்கிக் கூறப்பட்டது. மேற்படி நிகழ்வுகள் அனைவருக்கும் புரியும் வகையில் நாடகம் பாணியில் எடுத்துக் கூறப்பட்டதால் மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் பங்கேற்று பயனடைந்தனர்.

இதில் மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை நியமன அலுவலர் டாக்டர். .தங்கவிக்னேஷ் மற்றும் மாநகராட்சி உணவு பாதுகாப்பு அலுவலர்கள் த. கேசவராஜ் மற்றும் செல்வன், அருண்குமார், சூர்யா, சுதர்சன் மற்றும் மேற்படி பள்ளிகளின் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்

# திண்டல் வேளாளர் பொறியியல் கல்லூரியில் என்.எஸ்.எஸ்.முகாம் நிறைவு



ஈரோடு மார்ச் 18-

வேளாளர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்டம் சார்பாக நடைபெற்ற சிறப்பு முகாமின் நிறைவு விழா துய்யம் பூந்துறை கிராமம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, .மேட்டுப்பாளையத்தில் நடைபெற்றது.

இம்முகாமில் மரக்கன்று நடுதல், கோவில் வளாகம் சுத்தம் செய்தல், சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு, மாசுக் கட்டுப்பாடு விழிப்புணர்வு, பள்ளி சுற்றுச் சுவர் சுத்தம் செய்து வர்ணம் பூசுதல், பள்ளி சத்துணவுகூடம் வர்ணம் பூசுதல், இலவச பொது மருத்துவ முகாம், இலவச கண் சிகிச்சை முகாம், பள்ளி குழந்தைகளுக்கு கணினி மற்றும் ஆங்கிலப்பயிற்சி போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. நிறைவு விழா நிகழ்ச்சியில் வேளாளர் கல்வி அறக்கட்டளையின் செயலாளர் மற்றும் தாளாளர் .எஸ்.டி.சந்திரசேகர் மற்றும் வேளாளர் கல்வி அறக்கட்டளையின் நிர்வாகக் குழு உறுப்பினர் எம்..யுவராஜா தலைமை தாங்கினர். கல்லூரி முதல்வர் முனைவர்.எம்.ஜெயராமன் மற்றும் புலமுதல்வர் பேராசிரியர். பி.ஜெயச்சந்தர் ஆகியோர் சிறப்புரையாற்றி பள்ளித்தலைமை ஆசிரியை திருமதி. து.சாந்தி வாழ்த்துரை வழங்கினார். இம்முகாமிற்கான ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர்.மோ.கோவிந்தராஜன் மற்றும் துணை நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்ஹரிபிரசாத் செய்திருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

Before the XVII Additional City Civil Court At Chennai
I.A.No. 42 of 2015 in
In O.S.No. 10146 of 2010

R. Ethirajan,
No. 60, Vedachalam Street,
Vasudevanagar,
Chennai-600018.
And another ...Petitioners
Vs
S. Murugan.
No. 4/50, Dr. Ambedkar Street,
Palavakkam,
Chennai-600041.
And 17 others ...Respondents

To,
1. Estate of Pattammal, Represented by Saroja
No. 14, Eswaran Koil Street, Neelankarai, Chennai-600041.
2. Saroja,
No. 14, Eswaran Koil Street, Neelankarai, Chennai-600041.
3. Kanniammal,
No. 14, Eswaran Koil Street, Neelankarai, Chennai-600041.
4. Murugan,
No. 14, Eswaran Koil Street, Neelankarai, Chennai 600041.
5. Vasudevan,
No. 14, Eswaran Koil Street, Neelankarai, Chennai-600041.
6. Dhanapal
No. 14, Eswaran Koil Street, Neelankarai, Chennai - 600041.
7. G. Shanmugam,
No. 1/95, Senganiamman Koil Street, Neelankarai, Chennai - 600041.
8. G. Ravichandran,
No. 1/95, Senganiamman Koil Street, Neelankarai, Chennai-600041.
9. G. Loganathan,
No. 1/95, Senganiamman Koil Street, Neelankarai, Chennai-600041.
10. S. Anbarasu, (Minor), Rep. by Mother and Natural Guardian S.Thulasi,
No. 2/191, Senganiamman Koil Street, Neelankarai, Chennai-600041.
11. Tamil Selvi,
No. 4/335, II Main Road, Kapaleeswarar Nagar, Chennai - 600041.
12. R. Babu,
No. 44, Beemanna Mudali Street, Alwarpet, Chennai - 600018.
13. R. Sankaran,
No. 44, Beemanna Mudali Street, Alwarpet, Chennai - 600018.
14. M. Karthikeyan, S/o. Murugan,
No. 4/50, Dr. Ambedkar Street, Palavakkam, Chennai-600041.
15. M. Kalaiselvi, D/o. Murugan,
No. 4/50, Dr. Ambedkar Street, Palavakkam, Chennai - 600041.

My client namely Ethirajan has filed for interlocutory Application in I.A.No. 42 of 2015 in O.S.No. 10146 0 2010. Please take notice that the Hon'ble XVII Additional City Civil Court was pleased to ordered notice to you (Respondent 3 to 15,17 and 18) returnable by 24.03.2025. Kindly make it convenient to appear in the said court either in person or through your counsel on 24.03.2025 at 10.15 am. Otherwise, the matter will be heard and decided failing which in your absence.

B. VIJAY
Counsel for Petitioner/14th & 15th Defendant

BEFORE THE VII ADDL.CITY CIVIL COURT AT CHENNAI
O.S.No.3608 of 2024

UCO BANK,
Purasawalkam Branch,
Represented by its Chief Manager,
NO.14, Purasawalkam High Road,
Chennai – 600 007. ...Plaintiff
-Vs-
1. B. Priyanaka,
And Another ...Defendants

Notice
D1 : B. Priyanka, D/o. Late G. Balaji,
D2: B. Malathy, W/o. Late G. Balaji
Both are residing at,
No.7/27, Maduraiswamy Madam,
Second street, Perambur,
Chennai – 600 011.

Sir/Madam,
Please take notice that on 05.02.2025, the aforesaid Hon'ble Court was pleased to order notice to you returnable by 27.03.2025 for your appearance. You are hereby requested to appear before the above said Hon'ble Court at 10.30.A.M on 27.03.2025 in person or through your Counsel failing which the suit will be decided in your absence.

N.NAGANATHAN
(Advocate)
COUNSEL FOR PLAINTIFF

X Asst. Judge
IN THE CITY CIVIL COURT AT CHENNAI
E.P.No.3160 of 2021 in
O.S.No.3157 of 2018

K.Kalesha ... Decree Holder/Plaintiff
-Vs-
Thirupura Chits Private Ltd,
Represented by its Managing Director P.V.Krishna Prasad
& another ... Judgment Debtors/Defendants

To,
P.V.Krishna Prasad
S/o. Venkatraman
both are having office at
No.36, Jeenis Road,
Second Floor, Saidapet,
Chennai - 600 015.

Please take notice in the above Execution Petition filed by the Decree Holder against you for sale of your immovable property described in the schedule hereunder. You are hereby requested to be present in person or through your counsel, while your property will be auctioned in public as per the order of the Hon'ble X Asst. City Civil Court, Chennai at 4.00 PM on 02.04.2025 in the City Civil Court Campus, High Court Building, Chennai for the upset price of Rs.40,00,000/- (Rupees Forty Lakhs only)

SCHEDULE OF PROPERTY

All that piece and parcel of land measuring 252.62 sq.ft. and building in the ground floor, first floor and second floor thereon, bearing New Door No.2/2, Old Door No.19/1B, Jayaram Street, Saidapet, Chennai – 600 015, compromised in Town Survey No.74, as per TSLR, T.S.No.74/3, Block No.44, ZaminMambalam Village, Mambalam – Guindy Taluk, Chennai District, and Bounded on the
North by: Common passage &Jayaram Street,
South by: Sukkarlal Jain's House & ground,
East by:Sukumar's GHouse& ground &
West by:Krishnan's House & ground.
Measuring
East to West on the Northen side: 21 feet and 6 inches,
Est to West on the Southern side : 21 feet and 6 inches,
North to South on the Eastern side: 11 feet and 9 inches,
North to South on the Western side: 11 feet and 9 inches,
In all admeasuring 25.62 sq.ft. (together with 1/6th undivided share in common passage being 3 feet 3 inches wide and 91 feet length admeasuring 295.75 sq.ft.), and therefore the area of land totally measuring about 302 sq.ft. and situate within the Registration Sub District of Thiyagaraya Nagar and Registration District of Chennai South.

M.BALASUBRAMANIAN
COUNSEL FOR PETITIONER/D.H.

X JUDGE
IN THE HON'BLE SMALL CAUSES COURT AT CHENNAI
R.L.T.O.P.No: 24 of 2025

Mrs. Jabruthinisha,
Rep. by Power agent,
Mr. K. Mohamed Imran ... Applicant/Land Lord
-Vs-
Mr. Ziaudeen ... Respondent/Tenant

To
Mr. Ziaudeen
New 57, Old 288,
Second Floor, Thiru Vengadam Street, Pudupet,
Chennai – 600 002.
( Respondent/Tenant)

Please take notice that in the above Eviction Petition the Hon'ble X Judge Small Causes Court at Chennai has ordered paper publication to you for the hearing on 09.04.2025. Make yourself convenient to appear before the above said court on 09.04.2025 at 10.30 a.m. either in person or through counsel and defend your case, failing which this case will be decided on merits.

D.RAMESH
Counsel for Applicant/Land Lord

BEFORE THE HON'BLE I ASSISTANT JUDGE, CITY CIVIL COURT, CHENNAI
I.A.No.s 8 to 10 of 2024 in
I.A.No.20025 of 2008 in
O.S.No.8187 of 2008

V.Vijairahul
S/o. V.Janakiraman,
No.21, Rue de eglantiers,
No.1457, Luxembourg,
Reptd. By Power of Attorney
V.Janakiraman
S/o. [Late] A.V.Reddy,
No.128/51, S.R.P.Koil Street South,
Jawahar Nagar, Chennai-600082.
--- Petitioner / Petitioner / 2nd Plaintiff
== Vs ==
Mrs. Josephin Pouline,
W/o. [Late] K.John Paul,
No.5, Jambulingam Main Road, Gandhi Nagar,
G.K.M.Colony,
Chennai 600082. & others.
Respondents / L.R.s of the deceased
2nd Defendant & Proposed 8th to 10th Respondents & Proposed 8th to 10th Defendants

To,
Mrs. Josephin Pouline,
W/o. [Late] K.John Paul,
No.5, Jambulingam Main Road, Gandhi Nagar,
G.K.M.Colony,
Chennai 600082.

Madam,
Take NOTICE that in the above I.A.No.s 8 to 10 of 2024 by Order dated 04/03/2025 the above Hon'ble Court has ordered NOTICE to you by Paper Publication for the hearing date 09/04/2025. Please take NOTICE and be present in the above Court for the above I.A.s on 09/04/2025 at 10-30 A.M., failing which the I.A.,s will be heard in your absence and you will be determined as ex - parte.

Yours faithfully,
P.K.Mohan Vel, B.A., B.L.,
Advocate,
No.233, Law Chambers,
High Court Campus,
Chennai 600 104.
Counsel for the Petitioner /2nd Plaintiff

# ஈரோடு மாவட்ட பொதுமக்கள் குறைதீர் கூட்டம்

ஈரோடு.மார்ச்.18-

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் தலைமையில் நடைபெற்றது. இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, கல்வி கடன், இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், ஆக்கிரமிப்புகள் அகற்றுதல், புதிய குடும்ப அட்டை, மாற்றுத்திறனாளிகள் உபகரணங்கள் மற்றும் உதவித்தொகை வேண்டி, சாலை வசதி, பேருந்து வசதி மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 480 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட வருவாய் அலுவலர் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார். மேலும், முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். கூட்டத்தில், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ராஜகோபால், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி, துணை ஆட்சியர் (பயிற்சி) கே.சிவபிரகாசம் உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

**ENROLLMENT NOTICE**

After 10 days of the publication of this notice and within THREE months thereafter. I, SHREYAS.S S/o. S Srinivasarathnam, aged 33 years, Permanently residing at, NO. Dwarakaa Sri Nivas 15/26C, Srinivasapuram, 2nd Street, THIRUVANMIYUR CHENNAI - 600041. Intend having my enrolment as an advocate moved before the bar council of Tamilnadu, Bar Council Buildings High Court Campus , Chennai - 104. Those who have any valid objections may notify the same to Bar Council within 10 days.

SHREYAS.S

மாண்புமிகு 14வது உதவி நகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை
OS NO 5485 of 2024

பாரத் ஸ்டேட் வங்கி
சைதாப்பேட்டை கிளை. ...வாதி
-எதிர்-
திரு. அமுல்ராஜ் ...பிரதிவாதி

பிரதிவாதி
திரு. அமுல்ராஜ் ,
எண் 16/26, கண்ணதாசன் தெரு
ஈக்காட்டுத்தாங்கல்,
அம்பாள் நகர்,
கிண்டி, சென்னை 600032.

மேற்படி வாதி வங்கி பிரதிவாதியாகிய தாங்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையினை வட்டியுடன் வசூல் செய்ய வேண்டி தாக்கல் செய்யப்பட்ட தாவாவானது தங்களின் வருகைக்காக வருகின்றன 27/03/2025 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது அன்றைய தினம் தாங்கள் மேற்படி நீதிமன்றத்திற்கு காலை 10:30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராக வேண்டும் தவறும் பட்சத்தில் வழக்கானது தங்களுக்கு எதிராக ஒரு தலைப்பட்சமாக தீர்ப்பாகும் என்பதை அறியவும்.

இப்படிக்கு
ஜி.பாலசுப்பிரமணி
செ.தமீம் அன்சாரி
வாதி வழக்கறிஞர்கள்

மாண்புமிகு மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோயமுத்தூர்
O.S.No. 899 OF 2023

சங்கரலிங்கம், த/பெ.ஆறுமுகம்,
க.எண்.55,முருகன் கோவில் வீதி,
ஆவாரம்பாளையம்,கணபதி அஞ்சல்,
கோயமுத்தூர்-641006 ... வாதி
-எதிர்-
1. M.மோகன், த/பெ.லேட். மீனாட்சி சுந்தரம், எண்.6 பி, கணேஷ் என்கிளேவ், ராஜேஸ்வரி நகர், பொலிச்சலூர், செங்கல்பட்டு 600074
(மற்றும்)
2. ராஜேஸ்வரி, க/பெ.லேட்.மீனாட்சிசுந்தரம், எண்.6 பி, கணேஷ் என்கிளேவ், ராஜேஸ்வரி நகர், பொலிச்சலூர், செங்கல்பட்டு - 600074....பிரதிவாதிகள்

**அறிவிப்பு**

மேற்படி வாதி மேற்கண்ட பிரதிவாதிகள் மீது கடன் தொகையை திரும்ப செலுத்த கோரி கோவை மாண்புமிகு மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் மேற்படி வழக்கை தாக்கல் செய்து மேற்படி வழக்கு வருகின்ற 24.06.2025-ம் தேதி பிரதிவாதிகள் ஆஜராகும் படி வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே பிரதிவாதிகள் மேற்படி வாய்தா தேதியன்று காலை 10.30 மணிக்கு மேற்படி கோவை மாண்புமிகு மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கு ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

திரு.M.சரவணன் பி.ஏ.பி.எல்.,
திரு. K.S. பாலாஜி பி.ஏ.பி.எல்.,
வழக்கறிஞர்கள், கோவை.

### மும்பைக்கு எதிரான போட்டியில்

# எம்.எஸ்.டோனி 8-வது டவுன்: சி.எஸ்.கே. நிர்வாகம் தகவல்



**சென்னை, மார்ச் 18-**
மார்ச் 23-ம் தேதி சென்னை சேப்பாக்கத்தில் மும்பை இந்தியன்ஸ் - சி.எஸ்.கே. அணிகள் மோதுகின்றன. இதற்கான சி.எஸ்.கே. லெவனில் விஜய் சங்கர், அஸ்வின் இடம்பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எம்.எஸ்.டோனி 8-வது டவுனாக இறங்குகிறார்.

**சி.எஸ்.கே. அணி...**
மும்பைக்கு எதிரான போட்டியில் சி.எஸ்.கே. அணியில் மேலும் நூர் அகமது, கலீல் அகமது ஆகியோர் அறிமுகமாவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ருதுராஜ் கெய்க்வாட் தொடர்ந்து 2-வது சீசனாக கேப்டன் பதவியை வகிக்கிறார். 2 ஆண்டுகளுக்குப் பிறகு ஓப்பனிங்கில் ருதுராஜூம் டெவன் கான்வேயும் இறங்குகிறார்கள். மூன்றாம் நிலையில் தொடர்ந்து 2 சீசன்களாக மோசமாக இருந்து வரும் ராகுல் திரிபாதிக்குப் பதில் ரச்சின் ரவீந்திர இடம்பெறலாம்.

**ஷிவம் துபே...**
பேட்டிங்கில் 4-ம் நிலைக்கு விஜய் சங்கர் மற்றும் தீபக் ஹூடா இடையே கடும் போட்டி நிலவுகிறது. அடுத்த நிலையில் இந்தியா 2024 டி20 உலகக் கோப்பை வெற்றியில் முக்கியப் பங்கு வகித்த ஷிவம் துபே வருவார். இவரது தன்னம்பிக்கை லெவல் அதிகமாக இருப்பதால் இவரைக் கட்டுப்படுத்த எதிரணியினர் தனியாக உத்திகளை வகுத்தாக வேண்டியுள்ளது. சாம் கரண் 3 சீசன்கள் பஞ்சாப் கிங்ஸுக்கு ஆடிய பிறகு இப்போது சி.எஸ்.கே.வுக்காக ஆடவிருக்கிறார். இவரும் ரவீந்திர ஜடேஜாவும் பினிஷிங் ரோலைப் பூர்த்தி செய்வார்கள், ஆனாலும் சாம் கரண் அனைத்துப் போட்டிகளிலும் ஆட வாய்ப்பில்லை.

**டோனி பெரிய பலம்...**
அடுத்து டோனி. இப்போதெல்லாம் அவர் 2 ஓவர் பிளேயர் ஆகிவிட்டார். இவருக்கு நிரூபிப்பதற்கு ஒன்றுமில்லை. அணியின் உத்தியில் இவருடைய பங்கேற்பு பெரிய பலம். ஆகவே ஒரு ஆடும் பயிற்சியாளராகவே டோனி இருப்பார். விக்கெட் கீப்பிங்கில் இவருக்கு அடுத்த இடத்தில் டெவன் கான்வேதான் இருக்கிறார். அஸ்வின் மீண்டும் சொந்த மண்ணில் ஆடுவார். இவரும் கேப்டன்சி மெட்டீரியல் என்பதால் சி.எஸ்.கே. இந்த முறை ஆட்கொள்ளப்பட வேண்டிய ஒரு சக்தியாக உள்ளது.

**உத்தேச லெவன்...**
ருதுராஜ், கான்வே, ராகுல் திரிபாதி, விஜய் சங்கர், ஷிவம் துபே, சாம் கரண், ஜடேஜா, டோனி, அஸ்வின், நூர் அகமது, மதீஷா பதிரணா, கலீல் அகமது (இம்பாக்ட் சப்).

# சென்னை-மும்பை போட்டிக்கான டிக்கெட் விற்பனை எப்போது..?

சென்னை, மார்ச் 18-
ஐ.பி.எல். 2025 தொடரின் சென்னை - மும்பை அணிகளுக்கான போட்டி மார்ச் 23-ல் சேப்பாக்கத்தில் நடைபெறுகிறது. இப்போட்டிக்கான ஆன்லைன் டிக்கெட் விற்பனை மார்ச் 19 அன்று தொடங்குகிறது.

**ஐ.பி.எல். தொடர்...**
ஐ.பி.எல். 2025 தொடர் வருகின்ற மார்ச் 22-ஆம் தேதி கொல்கத்தா ஈடன் கார்டன் திடலில் தொடங்கவுள்ளது. இந்த போட்டியில் நடப்பு சாம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ் அணியும் மோதுகின்றன. சென்னையில் மார்ச் 23-ல் நடைபெறும் இரண்டாவது போட்டியில், சென்னை சூப்பர் கிங்ஸ் - மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதுகின்றன.

**டிக்கெட் விற்பனை...**
இந்நிலையில், வரும் மார்ச் 19 ஆம் தேதி காலை 10.15 மணிக்கு www.chennaisuperkings.com என்ற இணையதளத்தில் விற்பனை தொடங்கும் என்று அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆன்லைன் விற்பனைக்காக டிக்கெட்டின் விலை ரூ. 1,700 முதல் ரூ. 7,500 வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக சென்னை அணியின் மகேந்திர சிங் தோனி ஓய்வு பெறுவார் என்ற மனநிலை மக்களிடையே நிலவுவதால், டிக்கெட்டானது சிறிது நேரத்திலேயே விற்றுத்தீர்ந்து விடும் எனக் கூறப்படுகிறது. சென்னை மெட்ரோவில் சிஎஸ்கே கிரிக்கெட் டிக்கெட்டை காண்பித்து இலவசமாக பயணிக்கலாம் என சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# டெல்லி கேபிடல்ஸ் அணியின் துணை கேப்டனாக டு பிளெஸ்ஸிஸ் நியமனம்

புதுடில்லி, மார்ச் 18-
டெல்லி கேபிடல்ஸ் அணியின் துணைக் கேப்டனாக முன்னாள் தென்னாப்பிரிக்க வீரர் டு பிளெஸ்ஸிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

**ஐ.பி.எல். தொடர்...**
இந்த ஆண்டு ஐ.பி.எல். தொடர் வருகிற மார்ச் 22 ஆம் தேதி முதல் தொடங்குகிறது. தொடரின் முதல் போட்டியில் நடப்பு சாம்பியனான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை எதிர்த்து விளையாடுகிறது. இன்னும் சில நாட்களில் ஐ.பி.எல். தொடர் தொடங்கவுள்ள நிலையில், டெல்லி கேபிடல்ஸ் அணியின் துணைக் கேப்டனாக முன்னாள் தென்னாப்பிரிக்க வீரர் டு பிளெஸ்ஸிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

**டு பிளெஸ்ஸிஸ்...**
அண்மையில் டெல்லி கேபிடல்ஸ் அணியின் கேப்டனாக அக்ஷர் படேல் நியமிக்கப்பட்ட நிலையில், தற்போது அவருடன் இணைந்து டு பிளெஸ்ஸிஸ் துணைக் கேப்டனாக செயல்படவுள்ளார். டெல்லி அணியின் துணைக் கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளது குறித்து டு பிளெஸ்ஸிஸ் பேசியதாவது: நான் மிகவும் உற்சாகமாக இருக்கிறேன். டில்லி அணி மிகவும் சிறப்பாக உள்ளது. அந்த அணியில் சிறப்பான வீரர்கள் உள்ளனர். டில்லி அணியின் துணைக் கேப்டனாக செயல்படவுள்ளதை நினைத்து மகிழ்ச்சியாகவும், அணியின் துணைக் கேப்டனாக செயல்படுவதற்கு தயாராகவும் இருக்கிறேன் என்றார்.

**ஏலம் போகவில்லை...**
40 வயதாகும் டு பிளெஸ்ஸிஸ் கடந்த மூன்று சீசன்களாக ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியைக் கேப்டனாக வழிநடத்தி வந்தார். இருப்பினும், கடந்த ஆண்டு மெகா ஏலத்துக்கு முன்பாக டு பிளெஸ்ஸிஸை ஆர்.சி.பி. தக்கவைக்கவில்லை. ஐ.பி.எல். மெகா ஏலத்தின் முதல் சுற்றில் ஏலம் போகாத டு பிளெஸ்ஸிஸ், ஏலத்தை நிறைவு செய்யும் விரைவு சுற்றில் டில்லி கேபிடல்ஸ் அணியால் ரூ.2 கோடிக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டார். இந்த ஆண்டு ஐ.பி.எல். தொடரில் மார்ச் 24 ஆம் தேதி நடைபெறும் தனது முதல் போட்டியில் டில்லி கேபிடல்ஸ் லக்னௌ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணியை எதிர்த்து விளையாடவுள்ளது.

# ஐ.பி.எல். அணி கேப்டன்களின் சம்பளம் எவ்வளவு தெரியுமா..?



மும்பை, மார்ச் 18-
18-வது ஐ.பி.எல். தொடரில் அணி கேப்டன்கள் பெறப்போகும் சம்பளம் குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

**ஐ.பி.எல். தொடர்...**
ஐ.பி.எல். 2025 கிரிக்கெட் தொடர் வருகிற 22-ம் தேதி தொடங்குகிறது. இந்த முறை நடக்கும் முதல் போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதுகின்றன. ஐ.பி.எல். தொடர் தொடங்க இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், ஒவ்வொரு அணி வீரர்களும் பயிற்சியில் மும்முரம் காட்டி வருகின்றனர்.

**கேப்டன்கள் சம்பளம்...**
பத்து அணிகள் பலப்பரீட்சை நடத்தும் ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் மே மாதம் 25-ம் தேதி வரை நடைபெறுகிறது. இந்தத் தொடரின் முதல் போட்டி கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற இருக்கிறது. இன்னும் சில நாட்களில் ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் தொடங்கவுள்ள நிலையில், ஒவ்வொரு அணி கேப்டன்கள் பெறும் சம்பளம் எவ்வளவு என்பது குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

**ரிஷப் பண்ட் அதிகம்...**
ரிஷப் பண்ட் (லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ்) ரூ. 27 கோடி
ஸ்ரேயஸ் அய்யர் (பஞ்சாப் கிங்ஸ்) ரூ. 26.75 கோடி.
பேட் கம்மின்ஸ் (சன்ரைசர்ஸ் ஐதராபாத்) ரூ. 18 கோடி
ருதுராஜ் கெய்க்வாட் (சென்னை சூப்பர் கிங்ஸ்) ரூ. 18 கோடி
சஞ்சு சாம்சன் (ராஜஸ்தான் ராயல்ஸ்) ரூ. 18 கோடி
அக்சர் பட்டேல் (டெல்லி கேபிடல்ஸ்) ரூ. 16.5 கோடி
சுப்மன் கில் (குஜராத் டைட்டன்ஸ்) ரூ. 16.5 கோடி.
ஹர்திக் பாண்டியா (மும்பை இந்தியன்ஸ்) ரூ. 16.35 கோடி.
ரஜத் பட்டிதர் (ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு) ரூ. 11 கோடி
அஜிங்கியா ரஹானே (கொல்கத்தா நைட் ரைடர்ஸ்) ரூ. 1.5 கோடி.

# மாஸ்டர்ஸ் லீக் கோப்பை வென்ற இந்திய அணிக்கு ரூ.1 கோடி பரிசு




**ராய்ப்பூர், மார்ச் 18-**
மாஸ்டர்ஸ் கோப்பை வென்ற இந்திய அணிக்கு ரூ. 1 கோடி பரிசு வழங்கப்பட்டது.

**மாஸ்டர்ஸ் லீக்...**
முதலாவது சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்றது. மொத்தம் 6 அணிகள் பங்கேற்ற இந்தத் தொடரில் இந்தியா, வெஸ்ட் இண்டீஸ் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறின.

**விண்டீஸ் 148 ரன்கள்...**
இந்நிலையில், ராய்ப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் இந்தியா, வெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதின. டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் பேட்டிங் தேர்வு செய்தனர். அதன்படி, முதலில் பேட்டிங் செய்த வெஸ்ட் இண்டீஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 148 ரன்கள் எடுத்தது. தொடக்க ஆட்டக்காரர் டுவைன் சுமித் 45 ரன்களில் ஆட்டமிழந்தார். ஓரளவு நிலைத்து விளையாடி அரை சதம் கடந்த சிம்மன்ஸ் 57 ரன்னில் ஆட்டமிழந்தார். இந்தியா சார்பில் வினய் குமார் 3 விக்கெட்டும், ஷபாஸ் நதீம் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

**இந்தியா வெற்றி...**
இதையடுத்து, 149 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி இந்தியா களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் அம்பதி ராயுடு அதிரடியாக ஆடி அரை சதம் கடந்தார். அவர் 50 பந்தில் 74 ரன்கள் எடுத்து அவுட்டானார். சச்சின் 25 ரன்னில் ஆட்டமிழந்தார். இறுதியில், இந்தியா 17.1 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 149 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது. ஆட்ட நாயகன் விருது அம்பதி ராயுடுவுக்கு வழங்கப்பட்டது. இந்த நிலையில் வென்ற அணிக்கும் சிறப்பாக விளையாடிய வீரர்களுக்கும் பரிசு தொகையை வழங்கினர்.

**பரிசு தொகை...**
9 போர்கள் அடித்த விருது- அம்பதி ராயுடு - 50 ஆயிரம் ரூபாய் அதிக சிக்ஸ் அடித்த விருது- அம்பதி ராயுடு - 50 ஆயிரம் ரூபாய். கேம்சேஞ்சர் ஆஃப் தி மேட்ச் விருதை ஷபாஸ் நதீம் வென்றார். சிறந்த பவுலருக்கான விருதை ஷபாஸ் நதீம் வென்றார். ஆட்ட நாயகன் விருதை 50 பந்துகளில் 74 ரன்கள் அடித்த அம்படி ராயுடு வென்றார். இந்த சீசனில் அதிக ஃபோர் எடுத்த குமார் சங்கக்காரா (38 ஃபோர்ஸ்) 5 லட்சம் ரூபாய் பரிசு வென்றார்.

**ரூ.1 கோடி பரிசு...**
இந்த சீசனில் அதிக சிக்ஸ் எடுத்த ஷேன் வாட்சன் (25 சிக்ஸ்) 5 லட்சம் ரூபாய் பரிசு வென்றார். சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் தொடர் வெற்றி பெற்ற இந்தியா மாஸ்டர்ஸ் அணிக்கு 1 கோடி ரூபாய் பரிசு தொகை வழங்கப்பட்டது. இரண்டாவது இடம் பிடித்த ரன்னர் அப் அணியான வெஸ்ட் இண்டீஸ் மாஸ்டர்ஸ் அணிக்கு 50 லட்சம் ரூபாய் பரிசு தொகை வழங்கப்பட்டது.

## மும்பை வீரருக்கு நோட்டீஸ்

**18**-வது ஐ.பி.எல். டி20 கிரிக்கெட் தொடர் வருகிற 22-ம் தேதி தொடங்குகிறது. 10 அணிகள் பங்கேற்கும் இந்த கிரிக்கெட் தொடர் மே மாதம் 25-ம் தேதி வரை நடைபெறுகிறது. மும்பை இந்தியன்ஸ் அணியால் ரூ.75 லட்சத்திற்கு ஏலத்தில் எடுக்கப்பட்ட தென் ஆப்பிரிக்க வீரர் லிசாத் வில்லியம்ஸ் காயம் காரணமாக 2025 ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகினார். இவருக்கு பதிலாக மும்பை இந்தியன்ஸ் அணி மற்றொரு தென் ஆப்பிரிக்க வீரர் கார்பின் போஷ்-யை அவரது அடிப்படை ஏலத்தொகையான ரூ.75 லட்சத்திற்கு ஒப்பந்தம் செய்தது.
ஐ.பி.எல். லில் விளையாடுவதற்காக கார்பின் போஷ் தனது பி.எஸ்.எல். ஒப்பந்தத்தை ரத்து செய்வார் என்று கூறப்படுகிறது. இந்நிலையில், தனது பாகிஸ்தான் சூப்பர் லீக் ஒப்பந்தத்தை மீறியதாகக் கூறி, கார்பின் போஷ்க்கு பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. ஐ.பி.எல். நடைபெறும் அதே நேரத்தில் தான் பாகிஸ்தான் சூப்பர் லீக் போட்டிகளும் நடைபெறுகிறது.

## ஐ.பி.எல்.: ஸ்ரேயா பங்கேற்பு?

**உ**லகின் பிரபலமான டி20 கிரிக்கெட் தொடர் ஐ.பி.எல். . இந்த தொடரின் 18-வது சீசன் வருகிற 22-ந் தேதி கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் தொடங்குகிறது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மெகா ஏலம் நடைபெற்றது. இதில் ஒவ்வொரு அணியிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது. 5 அணிகளுக்கு புதிய கேப்டன்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் இந்த தொடர் ரசிகர்களிடையே பெரிதும் எதிர்ப்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.
இந்நிலையில் இந்த தொடரின் தொடக்க நாளில் கலை நிகழ்ச்சிகள் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கமான ஒன்று. அந்த வகையில் இந்த முறையும் பிரமாண்டமாக கலை நிகழ்ச்சிகள் நடத்த ஐ.பி.எல். நிர்வாகம் முடிவு செய்துள்ளது. கலை நிகழ்ச்சிகளில் பிரபல பாலிவுட் பின்னணி பாடகி ஸ்ரேயா கோஷல், நடிகை திஷா பதானி மற்றும் பஞ்சாபி பாப் பாடகர் கரண் அவுஜ்லா ஆகியோர் பங்கேற்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஆனால் இது குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு ஏதுவும் வெளியாகவில்லை.

## நசரியாவை முந்திய எம்பாப்பே

**லா** லீகா கால்பந்து தொடரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் ரியல் மாட்ரிட் - வில்லார்ரியல் அணிகள் மோதின. இதில் ரியல் மாட்ரிட் 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ரியல் மாட்ரிட் தரப்பில் நட்சத்திர வீரர் எம்பாப்பே 2 கோல்களையும் அடித்தார். வில்லார்ரியல் தரப்பில் ஜுவான் போய்த் மட்டுமே ஒரு கோல் அடித்தார்.
இந்த 2 கோல்களையும் சேர்த்து நடப்பு சீசனில் எம்பாப்பே அடித்த கோல்களின் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்தது. இதன் மூலம் ரியல் மாட்ரிட் அணிக்காக அறிமுக சீசனில் அதிக கோல் அடித்த வீரர்களின் பட்டியலில் 3-வது இடத்தில் இருந்த பிரேசில் முன்னாள் கால்பந்து வீரரன ரொனால்டோ நசரியாவை (30 கோல்கள்) பின்னுக்கு தள்ளி 3-வது இடத்தை பிடித்துள்ளார்.

## பும்ரா குறித்து கோலி கருத்து

**இ**ந்திய அணி அண்மையில் முடிவடைந்த சாம்பியன்ஸ் டிராபியை வெல்வதில் முக்கிய பங்கினை ஆற்றினார். தற்போது ஐ.பி.எல். தொடருக்காக தயாராகி வரும் அவரிடம் சமீபத்திய பேட்டி ஒன்றில் நீங்கள் உங்களது கெரியரில் எதிர்கொண்ட கடினமான பந்துவீச்சாளர் யார்? என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர்,
"நான் எதிர்கொண்ட கடினமான பந்துவீச்சாளர் பும்ரா" என்று கூறினார். இது குறித்து மேலும் பேசிய அவர், "ஜஸ்பிரித் பும்ரா உலகின் அனைத்து வடிவங்களிலும் சிறந்த பந்துவீச்சாளர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அவர் ஐ.பி.எல்.-ல் என்னை சில முறை அவுட்டாக்கியுள்ளார். நாங்கள் இருவரும் வலை பயிற்சியில் மோதிக்கொண்டால் கூட தீவிரமாக இருக்கும். குறிப்பாக ஐ.பி.எல். போல நாங்கள் வலை பயிற்சியில் மோதிக்கொள்வோம்" என்று கூறினார்.

# சென்னையில் மாநகராட்சி பூங்கா திறப்பு: துணை முதல்வர் உதயநிதி பங்கேற்பு

**சென்னை, மார்ச் 18-**
சென்னை நுங்கம்பாக்கத்தில் தனியார் கல்லூரி சார்பில் மேம்படுத்தப்பட்ட மாநகராட்சிப் பூங்காவினை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:
சென்னையை சிங்காரச் சென்னையாக உருவாக்கிடும் திட்டத்தின் ஒரு பகுதியாக நுங்கம்பாக்கம் எம்.ஓ.பி. வைணவக் கல்லூரி அருகிலுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காவை கல்லூரியை சுற்றியுள்ள பொதுமக்கள், குழந்தைகள் மற்றும் கல்லூயின் மாணவிகள் பயன்படுத்திடும் வகையில், எம்.ஓ.பி. வைணவக் கல்லூரியின் சார்பில் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 100 சதவீத முழுப் பங்களிப்பில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேம்படுத்தியுள்ளனர். இந்த பூங்காவினை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார்.
மேலும் இக்கல்லூரி மேற்கொண்டுள்ள மரம் நடும் திட்டத்தின் கீழ் கல்லூரிக்கு வருகை தரும் விருந்தினர்களுக்கு மலர்மாலைக்கு பதிலாக 'மரம் சான்றிதழ்' வழங்குவதுடன், வருகை தந்த விருந்தினரின் பெயரில் ஒரு மரத்தை நட்டு, பராமரித்து வருகின்றது. இந்நிகழ்ச்சியில் துணை முதல்வரை சிறப்பித்து கல்லூரியின் முதல்வர் "மரம் சான்றிதழை" வழங்கினார்.
இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், துணை மேயர் மு.மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே. சிற்றரசு, எம்.ஓ.பி. வைணவ கல்லூரி முதல்வர் முனைவர் அர்ச்சனா பிரசாத், துணை ஆணையர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார ஆணையர் கே.ஜெ.பிரவீன்குமார், மாமன்ற உறுப்பினர் நந்தினி உள்பட கல்லூரி மாணவிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர், என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எதிர்க்கட்சியினரை ஏன் பேச அனுமதித்தீர்கள் என முதல்வர் கேட்டதில்லை: சபாநாயகர்

**சென்னை, மார்ச் 18-**
சட்டசபையில் சபாநாயகர் அப்பாவு மீது அ.தி.மு.க. கொண்டுவந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி அடைந்தது. பேரவையில் நடந்த குரல் வாக்கெடுப்பிலும் டிவிஷன் முறையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பிலும் அ.தி.மு.க. கொண்டுவந்த தீர்மானம் தோல்வி அடைந்தது. நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு 63 பேர் ஆதரவாக வாக்களித்தனர். அ.தி.மு.க. கொண்டுவந்த தீர்மானத்திற்கு எதிராக 154 பேர் வாக்களித்த நிலையில் தீர்மானம் தோல்வி அடைந்தது. நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி அடைந்த நிலையில் மீண்டும் சபாநாயகர் இருக்கையில் அப்பாவு அமர்ந்தார். சபாநாயகர் இருக்கையில் மீண்டும் அப்பாவு அமர்ந்தபோது சட்டசபை உறுப்பினர்கள் கைதட்டி உற்சாக வரவேற்பு அளித்தனர்.
இதையடுத்து சபாநாயகர் அப்பாவு உரையாற்றினார். உரையில் அவர் கூறியதாவது: எதிர்க்கட்சி தலைவர் உட்பட தோழமை கட்சி தலைவர்கள் பேசிய அனைத்தையும் நான் கேட்டுக்கொண்டுதான் இருந்தேன். ஒரு சில தவறு நடந்திருந்தால் நானே திருத்தி இருப்பேன். அல்லது முதல்வரால் திருத்தப்பட்டிருப்பேன். அரசு ஒரே நாளில் 2 அல்லது 3 மானியக்கோரிக்கை நடத்துவதாக குற்றச்சாட்டுகள் வைத்தீர்கள். அ.தி.மு.க. ஆட்சியில் 30-க்கும் மேற்பட்ட துறைகளின் மானிய கோரிக்கைகளை ஒரே நாளில் நடத்தியதும் நினைவு கூர்கிறேன். எதிர்க்கட்சி தலைவர் பேச அனுமதிக்கவில்லை என கூறினார். அவர் 259 நிமிடம் பேசி உள்ளார். எதிர்க்கட்சியினரை ஏன் இவ்வளவு நேரம் பேச அனுமதித்தீர்கள் என முதல்வர் இதுவரை என்னிடம் கேட்டதில்லை. ஆளுநர் உரை மீதான விவாதத்தில் பேசுவதற்கு ஆளுங்கட்சியினருக்கு 25, எதிர்க்கட்சியினருக்கு 49 சதவீதம் வாய்ப்பு அளிக்கப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

# நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு தி.மு.க. கூட்டணி கட்சிகள் எதிர்ப்பு

**சென்னை, மார்ச் 18-**
தமிழக அரசின் 2025-26-ம் ஆண்டிற்கான பட்ஜெட்டை, சட்டசபையில் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கடந்த வெள்ளிக்கிழமை தாக்கல் செய்தார். மறுநாள் வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து தமிழக சட்டசபை கூட்டத்தொடர் ஏப்ரல் 30-ந்தேதி வரை நடைபெறும் என்றும் 17-ந்தேதி முதல் 20-ந்தேதி வரை பட்ஜெட் மீதான விவாதம் நடக்கும் என்றும் சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.
இதற்கிடையில், சபாநாயகர் அப்பாவுவை அந்த பதவியில் இருந்து நீக்கக்கோரும் தீர்மானத்தை சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத்தலைவர் உதயகுமார் (அ.தி.மு.க.) கடந்த ஜனவரி மாதம் கொடுத்துள்ளார். இந்த தீர்மானத்தின் மீது நேற்று விவாதம் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அதன்படி, நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான விவாதம் தொடங்கி நடைபெற்றது.
சபாநாயகர் அப்பாவு சட்டசபையை விட்டு வெளியே சென்றார். துணை சபாநாயகர் பிச்சாண்டி அவையை வழிநடத்தினார். இந்த நிலையில், சபாநாயகர் அப்பாவு மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு தி.மு.க. கூட்டணி கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.
காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள் கட்சி, ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கட்சிகளின் எம்.எல்.ஏ.க்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். தீர்மானத்திற்கு ஓ.பன்னீர்செல்வம் ஆதரவு எம்.எல்.ஏக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். பா.ஜ.க, பாமக உறுப்பினர்கள் யாரும் பேரவையில் இல்லை.

# தி.மு.க. - பா.ஜ.க. இடையே மறைமுக கூட்டணி: த.வெ.க. பகீர் குற்றச்சாட்டு

**சென்னை, மார்ச் 18-**
தி.மு.க. , பா.ஜ.க. இடையே மறைமுக கூட்டணி உள்ளதாக த.வெ.க. குற்றஞ்சாட்டியுள்ளது.
தமிழ்நாட்டில் அரசு மதுக்கடைகளை நடத்தும் டாஸ்மாக் நிறுவனத்திலும், மது ஆலைகளில் நடத்தப்பட்ட சோதனைகளில் ரூ. 1,000 கோடி அளவுக்கு ஊழல் உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக அமலாக்கத் துறை தெரிவித்துள்ளது.
இதனிடையே, ரூ. 1,000 கோடி அளவுக்கு டாஸ்மாக்கில் ஊழல் நடைபெற்றிருப்பதாக குற்றஞ்சாட்டி பா.ஜ.க. சார்பில் நேற்று போராட்டம் நடைபெற்றது. சென்னையில் உள்ள டாஸ்மாக் தலைமை அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த பா.ஜ.க.வினர் திட்டமிட்டிருந்தனர். இதையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, அக்கட்சியின் மூத்த தலைவர்கள் தமிழிசை சவுந்தரராஜன், எச்.ராஜா உள்பட பலர் கைது செய்யப்பட்டு வீட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.
இந்நிலையில், இது தொடர்பாக தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுச்செயலாளர் ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில், அண்மையில் தமிழ்நாட்டில் டாஸ்மாக் நிறுவனத்தில் சோதனை நடத்திய அமலாக்கத் துறை. அதில் ரூ.1000 கோடி அளவில் முறைகேடுகள் நடந்திருப்பதாகத் தெரிவித்தது. இந்த முறைகேடுகள் தொடர்பாக ஒன்றிய அரசின் அமலாக்கத் துறையானது துரிதமாகச் செயல்பட்டு மேல் நடவடிக்கைகள் எடுத்திருக்க வேண்டும். ஆனால், அது போன்று ஏதும் நடைபெற்றதாகத் தெரியவில்லை.
மாறாக, அமலாக்கத் துறையைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியாளர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் நிலையில், தமிழக பாஜகவினர். தமிழ்நாடு அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவது விந்தையிலும் விந்தை! தமிழ்நாட்டில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது? எதற்காக இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம்?
தற்போது, தமிழகத்தில் நடைபெற்று வரும் பா.ஜ.க. -தி.மு.க. நடத்தும் நாடகப் போக்கினைப் பார்த்தால் இருவரும் புறவாசல் வழியாக மறைமுகக் கூட்டணி வைத்துக் கொண்டு மக்களை ஏமாற்றி வருகின்றனர் என்பதே தெரிகின்றது. எனவே, ஒன்றிய அரசுக்குத் தமிழக மக்கள் நலனில் உண்மையான அக்கறை இருக்குமெனில், டாஸ்மாக் மோடி விவகாரத்தில் தொடர்ந்து மேல்நடவடிக்கை மேற்கொண்டு தவறு இழைத்தவர்களுக்கு, சட்டப்படி உரிய தண்டனை பெற்றுத் தர வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாநிலங்களவையில் இருந்து எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

**புதுடெல்லி, மார்ச் 18-**
வாக்காளர் அடையாள அட்டை விவகாரம் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து விவாதிக்க மறுப்பு தெரிவித்ததை அடுத்து மாநிலங்களவையில் இருந்து எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு செய்தன.
பாராளுமன்ற அவை நடவடிக்கைகளை ஒத்திவைத்துவிட்டு வாக்காளர் பட்டியலில் குளறுபடி, தொகுதி மறுசீரமைப்பு உள்ளிட்ட பிரச்னைகள் குறித்து விவாதிக்கக் கோரி எதிர்க்கட்சி எம்பிக்கள் விதி எண் 267இன் கீழ் ஒத்திவைப்பு நோட்டீஸை திங்கள்கிழமை காலை வழங்கினர். ஆனால், எதிர்க்கட்சிகளின் ஒத்திவைப்பு தீர்மானத்தை ஏற்க மாநிலங்களவைத் துணைத் தலைவர் ஹரிவன்ஷ் மறுப்பு தெரிவித்தார்.
இதற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்ட நிலையில், அவைக் குறிப்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துகள் இடம்பெறாது என்றும் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து, அவை நடவடிக்கைகளை புறக்கணித்து காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட கட்சிகளின் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.
திரிணமூல் காங்கிரஸை சேர்ந்த சுகேந்து சேகர் ராய், மௌசம் பி நூர, சுஷ்மிதா தேவ் மற்றும் காங்கிரஸின் பிரமோத் திவாரி ஆகியோர் தேர்தல் ஆணையத்தின் குளறுபடி தொடர்பாகவும், திமுகவின் வில்சன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டின் சிவதாசன் ஆகியோர் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாகவும் விவாதிக்க நோட்டீஸ் வழங்கினர். மேற்கு வங்கத்தின் எஸ்.சி., எஸ்.டி., மற்றும் ஓபிசி பிரிவினர்களுக்கு எதிராக நடைபெறும் அட்டூழியங்கள் குறித்து விவாதிக்க பாஜக எம்பி சமிக் பட்டாச்சார்யா நோட்டீஸ் வழங்கியிருந்தார்.
மேலும், எலான் மஸ்க் நிறுவனத்துடன் இந்திய தொலைத்தொடர்பு நிறுவனங்கள் மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்தின் தாக்கம் குறித்து விவாதிக்க இந்திய கம்யூனிஸ்ட் எம்பி பி. சந்தோஷ் குமார் நோட்டீஸ் அளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# சினிமா CINI செய்திகள்

## டெக்ஸ்டர் - விமர்சனம்



காதலர்களான நாயகன் ராஜீவ் கோவிந்த்தும், நாயகி யுக்தா பெர்வியும், திருமணம் செய்து கொள்ள தயாராக இருக்கும் நிலையில், யுக்தா பெர்வி கொலை செய்யப்படுகிறார். இதனால் சோகத்தில் தவிக்கும் நாயனுக்கு பழைய நினைவுகளை அழிக்கும் மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது. அதே நேரத்தில் பள்ளி தோழி சித்தாரா விஜயனின் நட்பு நாயகனுக்கு கிடைக்கிறது. மீண்டும் சகஜ நிலைக்கு திரும்பும் நேரத்தில், மர்ம நபரால் அவரும் கடத்தப்படுகிறார். அவரை காப்பாற்ற முயற்சிக்கும் அதே நேரத்தில், தன் காதலியை கொலை செய்தவனை தீவிரமாக தேடி வருகிறார். கொலையாளி பிடிபட்டானா? தோழியை கடத்தியது யார் என்பதற்கான விடையே டெக்ஸ்டர் படத்தின் கிளைமாக்ஸ். நாயகன் ராஜீவ் கோவிந்த், எல்லா காட்சிகளிலும் நேர்த்தியாக இயல்பாக நடித்திருக்கிறார். நாயகி யுக்தா பெர்வி மற்றொரு நாயகி சித்தாரா விஜயன் இருவரும் அருமையான நடிப்பை வெளிப்படுத்தி உள்ளனர். ஸ்ரீநாத் விஜயின் இசை சூப்பர். சிவத்தின் கதைக்கு, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியிருக்கும் சூரியன்.ஜி, கிரைம் கதையில் கொஞ்சம் காதல் கலந்து சுவாரஸ்யமான படமாக கொடுத்திருக்கிறார். மொத்தத்தில், டெக்ஸ்டர் ஒரு வித்யாசமான படம்

## சிட்டி ஆஃப் ட்ரீம்ஸ் - விமர்சனம்




அமெரிக்கா நாட்டின் குழந்தை கடத்தலை மையமாக வைத்து உருவாகி இருக்கும் படம் சிட்டி ஆஃப் டிரீம்ஸ். அமெரிக்காவில் குழந்தை கடத்தல் குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது என்பதை அழுத்தமாக பதிவு செய்திருக்கிறார் இப்படத்தின் இயக்குனர் .அமெரிக்காவை ஒட்டியுள்ள ஒரு பகுதியில் வசிக்கும் சிறுவன் ஆரி லோபஸ், கால்பந்தாட்ட கனவுகளோடு அமெரிக்கவுக்கு குடி வருகிறான். ஆனால் ஆடை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் கொத்தடிமையாக பணியமர்த்தப்படுகிறான். அவனைப் போல் பல சிறுவர்கள் அங்கு இருக்கிறார்கள். எப்படியாவது அங்கிருந்து தப்பித்து விட வேண்டும் என்று நினைக்கிறான் ஆரி லோபஸ், அவனது வலி மிகுந்த போராட்டத்துடன் எதார்த்த கதை அமைத்து அதை சிறப்பாக சொல்லியிருக்கிறார் இயக்குனர். முதன்மை பாத்திரத்தில் நடித்திருக்கும் சிறுவன் ஆரி லோபஸ், வசனமே பேசாமல் தன் கண்கள் மூலமாக பல உணர்வுகளை பார்வையாளர்களிடம் கடத்தியிருக்கிறார். அமெரிக்கா என்றாலே ஆடம்பரம் அழகு பந்தா பகட்டு மட்டும் அல்ல அங்கேயும், குற்ற செயல்கள் இருக்கத்தான் செய்கிறது என்பதை பதிவு செய்கிறது இப்படம். அமெரிக்காவின் இன்னொரு பக்கத்தை தைரியமாக உலகுக்கு காட்டியிருக்கும் தயாரிப்பாளர் ரூஃபஸ் பார்க்கரை நிச்சயம் பாராட்டலாம். .

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்:

# நலத்திட்ட உதவிகளை வழங்கினார் விருதுநகர் கலெக்டர் ஜெயசீலன்



**விருதுநகர், மார்ச் 18-**

விருதுநகர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இலவச வீட்டு மனைப்பட்டா மற்றும் பட்டா மாறுதல், குடும்ப அட்டை, வேலை வாய்ப்பு, விபத்து நிவாரணம், மாற்றுத் திறனாளிகள், நலிந்தோர் நலத்திட்டம் மற்றும் விதவை உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்பட்டது.

இக்கூட்டத்தில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் சார்பில் 65 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.6800- வீதம் மொத்தம் ரூ.4.42 லட்சம் மதிப்பிலான தையல் இயந்திரங்களையும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் இராஜபாளையம் வட்டம், சங்கரலிங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த ஜோதிமுத்து என்பவரின் மகன் காந்தி பாண்டி(வயது 14) கண்மாய் கலிங்களில் சிக்கி மரணமடைந்ததால்,

முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.1 இலட்சம் நிவாரணத் தொகைக்கான காசோலைகளையும், மாவட்ட தொழில் மையம் சார்பில், மக்களுடன் முதல்வர் முகாமில் மனு அளித்திருந்தவர்களில், திருத்தங்கலைச் சேர்ந்த கருப்பசாமி என்பவருடைய விண்ணப்பம் அண்ணல் அம்பேத்கர் தொழில் திட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டு ரூ.3.57 இலட்சம் கடன் வழங்கப்பட்டு, அதற்கான ரூ.1.27 இலட்சம் மானியத்தொகையினையும்,

பாலவநத்தத்தைச் சேர்ந்த வெங்கடேஷன் என்பவருடைய விண்ணப்பம் வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலைவாயப்பு உருவாக்கும் திட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டு ரூ.5 லட்சம் கடன் வழங்கப்பட்டு, அதற்கான ரூ.1.25 இலட்சம் மானியத்தொகையினையும் என ஆக மொத்தம் ரூ.7.94 இலட்சம் மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜேந்திரன்,


தனித்துணை ஆட்சியர் காளிமுத்து, அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ராபர் - திரை விமர்சனம்



படித்த படிப்பிற்கு ஏற்ற வேலை கிடைக்காததால் கிடைத்த வேலையை செய்துக் கொண்டிருக்கும் நாயகன் சத்யாவுக்கு, சொகுசு வாழ்க்கை வாழ வேண்டும் என்ற ஆசை வருகிறது. அதற்காக வழிப்பறி செயின் பறிப்பு போன்ற குற்றங்களில் ஈடுபடுகிறார். ஒரு கட்டதில் கொலை செய்யவும் துணிகிறார். இதனால், தொழில் ரீதியான எதிரிகள் அவரை துரத்த, மறுபக்கம் பாதிக்கப்பட்டவர்கள் பழி தீர்க்க அவரை விரட்டுகிறார்கள். அவர்களிடம் இருந்து நாயகன் சத்யா தப்பித்து தனது குற்ற செயல்களை விட்டு விட்டாரா அல்லது தொடர்ந்தாரா? என்பது தான் ‘ராபர் படத்தின் கிளைமாக்ஸ். நாயகன் சத்யா அப்பாவித்தனமான முகத்தோடும், எதார்த்த பேச்சோடு பயணித்து குற்ற செயல்களில் ஈடுபடும் போது படம் பார்ப்பவர்களுக்கும் பதற்றத்தை கொடுத்து விடுகிறார். சிறையில் கெத்தாக எண்ட்ரி கொடுக்கும் செண்ட்ராயனின் கதாபாத்திரம் படத்திற்கு பெரும் பலத்தை சேர்த்திருக்கிறது. டேனியல் போப், ஜே.பி, தீபா சங்கர், ஸ்டில்ஸ் பாண்டியன் ஆகியோர் தங்களது அனுபவமான நடிப்பு மூலம் திரைக்கதைக்கு பலம் சேர்த்திருக்கிறார்கள். என்.எஸ்.உதயகுமாரின் ஒளிப்பதிவும், ஜோகன் சிவனேஷின் இசையும் பாராட்டுக்குரியது. ’மெட்ரோ’ படத்தை இயக்கிய அனந்த கிருஷ்ணனின் கதைக்கு, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியிருக்கும் எஸ்.எம்.பாண்டி, பார்ப்பவர்களை பதற வைத்து விடுகிறார். மொத்தத்தில் ராபர் படத்தை ஒரு முறை நிச்சயம் பார்க்கலாம்.

# ஒய்நாட் சசிகாந்த் இயக்கும் டெஸ்ட்



ஒய்நாட் (YNOT) ஸ்டுடியோஸ் நிறுவனத்தின் தயாரிப்பாளர் எஸ்.சஷிகாந்த், ‘டெஸ்ட்’ படம் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். மாதவன், நயன்தாரா, சித்தார்த் ஆகியோர் முக்கிய வேடத்தில் நடித்திருக்கும் இப்படம் வரும் எப்ரல் 4 ஆம் தேதி நெட்பிளிக்சில் வெளியாகிறது. இந்த நிலையில், சமீபத்தில் பத்திரிகையாளர்களிடம் பேசிய சஷிகாந்த், “நான் இயக்குநராக வேண்டும் என்பதற்காகவே தான் தயாரிப்பாளாரானேன். படம் இயக்க வேண்டும் என்ற எண்ணம் பல வருடங்களாகவே இருந்தது, அதனால் நான் பணியாற்றிய படங்களில் இருந்தே கதை சொல்லல் உள்ளிட்ட விசயங்களை கற்றுக் கொண்டேன். 12 வருடங்களுக்கு முன்பே டெஸ்ட் படத்தின் கதையை எழுத தொடங்கி விட்டேன். கொரோனாவின் போது கிடைத்த நேரத்தில் தான், படம் இயக்க வேண்டும் என்ற முடிவு எடுத்து, இப்போது இயக்கியிருக்கிறேன் என்றார். மேலும், ‘டெஸ்ட்’ கிரிக்கெட் பற்றிய படம் இல்லை. ஒவ்வொரு மனிதருக்கும் தாங்கள் யார் என்பதை உணரக்கூடிய ஒரு தருணம் வரும், அப்படிப்பட்ட தருணத்தை எதிர்கொள்ளும் மூன்று கதாபாத்திரங்களின் கதை தான் இந்த டெஸ்ட் படம் என்றார்



தேனி மாவட்டம் ஆட்சியரகத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையினை கலெக்டர் ரஞ்ஜீத் சிங், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் காலாண்டு தணிக்கை செய்தனர்.

## மாடன் கொடை விழா - விமர்சனம்



திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் சுடலை மாட சாமியின் கொடை விழா நடக்கிறது. அப்போது தெருக்கூத்து கலஞரான திருநங்கை ஒருவர் மர்மமாக இறக்கிறார். அன்றிலிருந்து அங்கு கொடை விழா நடக்காமல் போகிறது. பல வருடங்களாக நடக்காமல் இருக்கும் கொடை விழாவை மீண்டும் நடத்த வேண்டும் என்ற முடிவுடன் வருகிறார் நாயகன் கோகுல் கவுதம். அதற்கு இடைஞ்சலாக இருக்கிறார் ஊர் தலைவரான சூரிய நாராயணன். கொடை விழா நடத்தும் முயற்சியில் ஈடுபடும் போது நாயகன் மீது கொலைப்பழி விழுகிறது. அதனால் சிறைக்கு செல்லும் நாயகன் திரும்பி வந்து மாடன் கொடை விழாவை நடத்தினாரா?, திருநங்கை மரணத்தின் பின்னணி யார் என்பதை கண்டு பிடித்தாரா ஆகிய கேள்விகளுக்கான விடைதான் படத்தின் கிளைமாக்ஸ். நாயகனாக நடித்திருக்கும் அறிமுக நடிகர் கோகுல் கவுதம், மண்ணின் மைந்தராக, கதாபாத்திரத்திற்கு சரியான தேர்வாக இருக்கிறார். காதல் காட்சிகளில் சற்று தயக்கத்துடன் நடித்திருக்கிறார். நாயகியாக நடித்திருக்கும் ஷர்மிஷா மிடுக்காக அசத்தலாக நடித்திருக்கிறார். சூப்பர் குட் சுப்பிரமணியம், ஸ்ரீப்ரியா சிவவேலன், பால்ராஜ், மாரியப்பன், ரஷ்மிதா என அனைவரும் எதார்த்த நடிப்பை கொடுத்திருக்கிறார்கள். விபின். ஆர் இசை அருமை. எழுதி இயக்கியிருக்கும் இரா.தங்கபாண்டி கிராமத்து வாழ்வியலின் ஒரு பகுதியை கதைக்களமாக எடுத்துக் கொண்டு அதை திரை மொழியில் நேர்த்தியான படைப்பாக கொடுத்திருக்கிறார். மொத்தத்தில், இந்த ‘மாடன் கொடை விழா’ நம் மண் சார்ந்த படைப்பு.

## கச்சத்தீவு திருவிழாவுக்கு பிறகு மீண்டும் கடலுக்கு சென்ற ராமேசுவரம் மீனவர்கள்

**ராமேசுவரம், மார்ச் 18-**

கச்சத்தீவு திருவிழாவை முன்னிட்டு தொடர்ந்து 5 நாட்கள் கடலுக்குச் செல்லாமல் இருந்த ராமேசுவரம் மீனவர்கள் கடலுக்குச் சென்றனர்.

கச்சத்தீவில் உள்ள புனித அந்தோணியார் ஆலயத் திருவிழா கடந்த 14, 15-ம் ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றன. பாதுகாப்பு காரணங்களுக்காக ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் 12-ம் தேதி முதல் கடலுக்குச் செல்வதற்கு மீன்வளத் துறையினர் தடை விதித்திருந்தனர். இதனால் கடலுக்கு செல்வதற்கான அனுமதி டோக்கனும் மீனவர்களுக்கு வழங்கப்படவில்லை. இந்நிலையில், ராமேசுவரம் விசைப்படகு மீனவர்கள் 500-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் அனுமதி டோக்கன் பெற்று திங்கட்கிழமை கடலுக்குச் சென்றனர். பாம்பன் மற்றும் மண்டபம் விசைப்படகு மீனவர்கள் நாளை கடலுக்குச் செல்கின்றனர்.

# திருமங்கலம் நீதிமன்ற வளாகத்தில் 39-வது தேசிய புத்தக கண்காட்சி

## சார்பு நீதிபதி ஜி.பிரபாகரன் தொடங்கி வைத்தார்



**திருமங்கலம், மார்ச் 18-**

திருமங்கலம் வழக்கறிஞர்கள் சங்கம் திருமங்கலம் கிளை நூலகம் மற்றும் மதுரை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் இணைந்து மூன்று நாட்கள் நடத்திடும் 39 வது தேசியப் புத்தகக் கண்காட்சி திருமங்கலம் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு திருமங்கலம் வழக்கறிஞர்கள் சங்க தலைவர் சி.ராமசாமி தலைமை வகித்தார். செயலாளர் வி.அறிவொளி முன்னிலை வகித்தார்.

திருமங்கலம் கிளை நூலக இரண்டாம் நிலை நூலகர் கோ.பத்மா வரவேற்றார்.

ஏராளமான வழக்கறிஞர்கள் பொதுமக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்ட இந்த புத்தகக் கண்காட்சியினை திருமங்கலம் சார்பு நீதிபதி ஜி.பிரபாகரன் திறந்து வைத்து பார்வையிட்டு சிறப்புரையாற்றினார்.

இதனை தொடர்ந்து முதல் விற்பனையைத் திருமங்கலம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி சி.தினேஷ்குமார் துவக்கி வைக்க, முதல் விற்பனையை திருமங்கலம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி இ.மணிகண்டன் பெற்றுக் கொண்டார்.

இவ்விழாவில் மாவட்ட நூலக அலுவலர் (ப.நி) த.இளங்கோ, வாசகர் வட்ட தலைவர் சு.சங்கரன், துணைச் செயலாளர் நா.பார்த்தசாரதி, மூன்றாம் நிலை நூலகர் சு.வே. மலர் விழி, வாசகர் வட்ட துணைத் தலைவர் சு.பிரசன்னா முருகன், வாசகர் வட்டம், திருமங்கலம்துணைச் செயலாளர் அ.ஆதிமூலம், அரசு வழக்கறிஞர் தங்கசுவாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்.

நிகழ்வின் நிறைவில் முதுநிலை விற்பனை சீரமைப்பாளர் எ.கிருஷ்ண மூர்த்தி நன்றி தெரிவித்தார்.

இந்த நிகழ்விற்கான ஏற்பாடுகளை மதுரை நியு செஞ்சுரி புக் ஹவுஸ் மண்டல மேலாளர் ஆர்.மகேந்திரன், மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் சிறப்புடன் செய்திருந்தனர். தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இந்த புத்தக கண்காட்சியில் புத்தகங்களை வாங்குபவர்களுக்கு 10 சதவீதம் சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# பி.ஆர்.பிளாஸ்டிக் தொழிற்சாலை திறப்பு: வெங்கடேசன் எம்.எல்.ஏ. பங்கேற்பு



**அலங்காநல்லூர், மார்ச் 18-**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே தேவசேரி பிரிவு, ஆத்தூர் கிராமத்தில் பி.ஆர்.பிளாஸ்டிக் தொழிற்சாலை நிறுவனம் திறப்பு விழா நடைபெற்றது.

இதில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். கவுண்டர் மகாஜன சங்க தலைவர் விஜயன், தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள், தன்ராஜ்,

பரந்தாமன், துணைச் செயலாளர் அருண் விஜயன், பொதுக்குழு உறுப்பினர் முத்தையன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக கிளைச் செயலாளர் அறிவு, பி.ஆர்.பிளாஸ்டிக் நிறுவனர் ஸ்வேதா, ராம்குமார், தனசேகர் ஆகியோர் வரவேற்றனர்.

இந்த தொழில் நிறுவனத்தில் உணவுப்பொருட்கள் பார்சல் செய்வதற்கான பிளாஸ்டிக் பாக்ஸ், மூடிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் வாடிக்கையாளர்கள் கேட்கும் அளவில் தயார் செய்யப்படுகிறது.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

## ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே

## வனப்பகுதி நிலப் பகுதியில் பறவைகள் கணக்கெடுப்பு

**விருதுநகர், மார்ச் 18-**

வனப்பகுதி மற்றும் நில பகுதியில் பறவைகள் கணக்கெடுப்பு நடைபெற்றது.

ஸ்ரீவில்லிபுத்தூர் வனப்பகுதி அருகே நிலப்பரப்பில் வசித்து வரும் பறவைகளை கணக்கெடுக்கும் பணியில் துவங்கியது வனத்துறையினர் ஈடுபட்டு உள்ளனர் இந்த கணக்கெடுப்பில் கல்லூரி மாணவர்களும் தன்னார்வலர்களும் பங்கேற்று உள்ளனர். ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பக வனப்பகுதி அருகே நிலப் பகுதியில் வசிக்கும் பறவைகளை கணக்கெடுக்கும் பணி ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுவது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டுக்குரிய பறவைகள் கணக்கெடுப்பு தொடங்கியது ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியை பொருத்தவரை ஸ்ரீவில்லிபுத்தூர் செண்பகத் தோப்பு விரியன் கோவில் அத்தி கோயில் பிளவக்கல் அணை கான்சாபுரம் இதேபோல் ராஜபாளையம் சேத்தூர் தேவதானம் சாப்டூர் ஆகிய பகுதி அருகே உள்ள நிலப்பரப்பில் வசிக்கும் பறவைகள் கணக்



கெடுக்கும் பணி இன்று துவங்கியுள்ளது இந்தப் பறவைகள் கணக்கெடுப்பில் அந்தந்த பகுதி வனத்துறையினருடன் கல்லூரி மாணவர்களும் தன்னார்வலர்களும் இயற்கை ஆர்வலர்களும் பங்கேற்று உள்ளனர்.

கணக்கெடுப்புக்கு பின்னர் வனப்பகுதியை அருகே உள்ள நிலப்பரப்பில் எத்தனை வகையான பறவைகள் உள்ளன என்பது குறித்த விவரங்கள் தெரிய வரும் என வனத்துறையினர் தெரிவித்தனர்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலினை தென்னிந்திய பொறியியல் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் மிதுன் ராம்தாஸ், துணைத்தலைவர் ஆர்.அருண், நிர்வாகிகள், பவுண்டரீஸ் டெவலப்மென்ட் பவுண்டேஷன் இயக்குநர் ஆர்.சரவணன், பம்ப் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் இயக்குநர் கே.வி.கார்த்திக், வார்ப்பு தொழிலாளர்கள் நிறுவனத்தின் தலைவர் கே.வேலுசாமி ஆகியோர் சந்தித்து 2025-2026-ம் நிதிநிலை அறிக்கையில் கோவை மாவட்டத்தில் பல்வேறு தொழில் மையம் அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்தனர்.



● சென்னை தலைமைச்செயலகம் வளாகத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களை சந்தித்தார். அருகில் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

## எங்களை யாராலும் பிரிக்க முடியாது:

# செங்கோட்டையன் குறித்த கேள்விக்கு இ.பி.எஸ். பதில்

சென்னை, மார்ச் 18-

நாங்கள் ஒற்றுமையாக தான் இருக்கிறோம். எங்களை யாராலும் பிரிக்க முடியாது' என முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் குறித்து நிருபர்கள் எழுப்பிய கேள்விக்கு இ.பி.எஸ்., பதில் அளித்தார்.

கடந்த சில தினங்களாக அ.தி.மு.க., எம்.எல்.ஏ.,க்களின் கூட்டங்களில் பங்கேற்காமல் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தவிர்த்து வருகிறார்.

இதனால் அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ். மற்றும் செங்கோட்டையன் இடையே மோதல் போக்கு நிலவுகிறது என்று அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாக பேசப்படுகிறது.

சட்டசபை வளாகத்தில் நேற்று நடந்த அ.தி.மு.க., எம்.எல்.ஏ., கூட்டத்தையும் செங்கோட்டையன் புறக்கணித்து விட்டார்.

சென்னை தலைமைச் செயலகம், வளாகத்தில், இ.பி.எஸ்., நிருபர்கள் சந்திப்பில், அ.தி.மு.க., எம்.எல்.ஏ., கூட்டத்தை செங்கோட்டையன் புறக்கணித்தது குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு இ.பி.எஸ்., அளித்த பதில் பின்வருமாறு:

அது உங்களுக்கு ரொம்ப அவசியமா இருக்குமான்னு கேட்கிறேன். ஏங்க எங்கள பிரிச்சு பார்க்கிறதிலேயே இருக்குறீங்க. நல்லா உஷாரா கேள்வி கேக்குறீங்க. எப்ப பார்த்தாலும், இதுல ஏதாவது குழப்பம் வருமா, என்றுதான் இருக்கீங்களே தவிர ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று எண்ணுங்கள். நாங்கள் இப்பொழுது ஒற்றுமையா தான் இருக்கிறோம்.

யாராலும் பிரிக்க முடியாதுங்க. என்றைக்கு நான் முதல்வர் ஆனேனோ, அன்றைக்கு இருந்து, இந்த திட்டத்தை போட்டுக்கிட்டு தான் இருக்காங்க, ஆனால் அதையெல்லாம் உடைத்து எறிந்து கொண்டுதான் இருக்கிறோம். அ.தி.மு.க.,வை யாராலும் உடைக்க முடியாது. முடக்க முடியாது. அப்படி முயற்சி செய்தால் மூக்கு உடைந்து போகும்.

இவ்வாறு இ.பி.எஸ். பதில் அளித்தார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் நேற்று நிதித்துறை சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள தமிழர் நிதி நிர்வாகம்-தொன்மையும் தொடர்ச்சியும் நூலையொட்டி சேகரிக்கப்பட்ட நூற்றாண்டு கால நிதிநிலை அறிக்கைகள், விரிவான திட்ட மதிப்பீடுகள் போன்றவை தொடர்பாக தமிழ் இணைய கல்வி கழகத்தால் தொகுக்கப்பட்ட சிறப்பு இணைய பக்கத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச்செயலாளர் முருகானந்தம், நிதித்துறை முதன்மைச்செயலாளர் த.உதயச்சந்திரன், துணைச்செயலாளர்கள் பிரத்திக் தாயன், ரிஷப் உடனிருந்தனர்.

# நடுநிலையோடு செயல்படுபவர் பேரவைத்தலைவர் அப்பாவு

## சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, மார்ச் 18-

நடுநிலையோடு செயல்படுபவர் பேரவைத் தலைவர் அப்பாவு என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பேரவைத் தலைவர் அப்பாவு மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீது முதல்வர் ஸ்டாலின் பேசுகையில், அப்பாவு கனிவானவர், அதேநேரத்தில் கண்டிப்பானவர். என் தலையீடோ, அமைச்சர்கள் தலையீடோ இன்றி பேரவையை நடத்தி வருகிறார். நடுநிலையோடு செயல்படுபவர் பேரவைத் தலைவர் அப்பாவு.

விருப்பு, வெறுப்பின்றி வாதங்களை முன்வைக்க வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டவர். யார் மீதும் யார் வேண்டுமானாலும் விமர்சனம் வைக்கலாம். சுதந்திரக் காற்றை இந்த பேரவை சுவாசிக்கிறது. அனைவரையும் ஒரே கண்ணோட்டத்துடன் பார்த்து சிறப்பாக செயல்படுகிறார்.

அதிமுக ஆட்சியில் அவைத் தலைவர்கள் நடந்து கொண்டது போல் தற்போதையை பேரவைத் தலைவர் அப்பாவு நடந்துகொள்வதில்லை.

அரசு மீது குற்றம், குறை கூற முடியாதவர்கள், இவ்வாறு தீர்மானம் கொண்டு வந்துள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

## தி.மு.க.-அ.தி.மு.க. இடையே காரசார விவாதம்:

# மடிக்கணினி விவகாரத்தில் இ.பி.எஸ். கேள்விக்கு முதல்வர் ஸ்டாலின் பதில்

சென்னை, மார்ச் 18-

மடிக்கணினி விவகாரம் தொடர்பாக சட்டப்பேரவையில் தி.மு.க. - அ.தி.மு.க. உறுப்பினர்கள் இடையே காரசார விவாதம் நடைபெற்றது. இ.பி.எஸ். எழுப்பிய கேள்விக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கமளித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை தமிழக பொது பட்ஜெட்டும் சனிக்கிழமை வேளாண் பட்ஜெட்டும் தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து பேரவை நிகழ்வுகள் நேற்று (திங்கள்கிழமை) காலை தொடங்கி நடைபெற்று வருகின்றன. பேரவைத் தலைவர் அப்பாவு மீதான அ.தி.மு.க.வின் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டு பின்னர் வாக்கெடுப்பில் தீர்மானம் தோல்வி அடைந்தது. இதனால் அப்பாவு, பேரவைத் தலைவர் பதவியில் தொடர்ந்து வருகிறார்.

பின்னர், 'கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படும்' என பட்ஜெட்டில் கூறியது குறித்து தி.மு.க. - அ.தி.மு.க. இடையே காரசார விவாதம் நடைபெற்றது. பள்ளி மாணவர்களின் அறிவு வளர்வதற்கும் விஞ்ஞான வளர்சிக்காகவும் வழங்கப்பட்ட மடிக்கணினி திட்டத்தை நிறுத்தியது ஏன்? 4 ஆண்டுகளாக தி.மு.க. ஆட்சியில் ஏன் மடிக்கணினி வழங்கவில்லை? என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த முதல்வர் ஸ்டாலின், "மடிக்கணினி திட்டத்தை நாங்கள் நிறுத்தவில்லை, அ.தி.மு.க. ஆட்சியிலேயே நிறுத்தி விட்டீர்கள். அந்த திட்டத்தைதான் சரிசெய்து தற்போது பட்ஜெட்டில் அறிவித்திருக்கிறோம். மடிக்கணினி திட்டத்தை மீண்டும் கொண்டுவந்தது தி.மு.க. அரசுதான். தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது, வாக்களித்தவர்கள் மட்டுமல்ல, வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்து பணியாற்றுவோம் என்று கூறினோம். அதைத்தான் தொடர்ந்து செய்து வருகிறோம்" என்று கூறினார்.



● சென்னை நுங்கம்பாக்கத்தில் நேற்று நமக்கு நாமே திட்டத்தின் கீழ் எம்.ஒ.பி. வைணவ மகளிர் கல்லூரியில் சார்பில் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி பூங்காவினை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் கே.என்.நேரு, மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், நா.எழியன் எம்.எல்.ஏ., ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் ஆகியோர் உடனிருந்தனர்.

# அ.தி.மு.க.வின் நம்பிக்கையில்லா...(1-ம் பக்க தொடர்ச்சி)

தீர்மானத்துக்கு தி.மு.க. கூட்டணிக் கட்சிகளான காங்கிரஸ், ம.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகள், வி.சி.க. எம்.எல்.ஏக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த விவாதத்தில், பா.ஜ.க., பா.ம.க. உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை. குரல் வாக்கெடுப்பில் இந்த தீர்மானம் தோல்வி அடைந்தது.

**டிவிஷன் முறையில் எண்ணிக்கை...**

எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கையை ஏற்று, சபாநாயகர் மீதான நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு டிவிஷன் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இது எண்ணிக்கை முறையிலான வாக்கெடுப்பு ஆகும். சட்டப்பேரவையில் மொத்தம் 6 டிவிஷன்கள் உள்ளன.

டிவிஷன் வாரியாக இந்த தீர்மானத்தை எத்தனை பேர் ஆதரிக்கிறார்கள், எதிர்க்கிறார்கள் என்ற எண்ணிக்கை அடிப்படையில் முடிவுகள் அறிவிக்கப்படும்.

அதன்படி சட்டப்பேரவை செயலர் முன்நின்று இந்த டிவிஷன் வாக்கெடுப்பை நடத்தினார்.

டிவிஷன் முறையிலும் சபாநாயகர் மீது அ.தி.மு.க. கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி அடைந்தது.

சபாநாயகர் மீது அ.தி.மு.க. கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்துக்கு 63 பேர் ஆதரவளித்திருந்த நிலையில், 154 பேர் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். இதனால், சட்டப்பேரவையில் அ.தி.மு.க. கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி அடைந்தது.

**மீண்டும் சபாநாயகர்...**

இதனால், சபாநாயகரை நீக்கக்கோரி அ.தி.மு.க. கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி அடைந்துள்ளது என அறிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, சபாநாயகர் அப்பாவு மீண்டும் சபாநாயகர் இருக்கையில் வந்தமர்ந்து, அடுத்த அலுவல்களை மேற்கொள்ள உத்தரவு பிறப்பித்தார். இனி தொடர்ந்து அவர் வழக்கம்போல் அவையை வழிநடத்துவார்.

# சுப்ரீம் கோர்ட் புதிய நீதிபதியாக பதவியேற்ற ஜாய்மல்யா பாக்சி

## நீதிபதிகளின் எண்ணிக்கை 33 ஆக உயர்வு

புதுடெல்லி, மார்ச் 18-

கொல்கத்தா உயர் நீதிமன்றத்தின் மூத்த நிதிபதியான ஜாய்மல்யா பாக்சி, சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக நேற்று பதவியேற்றுக் கொண்டார். இதன் மூலம் நீதிபதிகளின் எண்ணிக்கை 33 ஆக உயர்ந்துள்ளது.

சுப்ரீம் கோர்ட் வளாகத்தில் நடந்த விழாவில், மற்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் முன்னிலையில் நீதிபதி ஜாய்மல்யாவுக்கு இந்திய தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா பதவிப் பிரமாணம் செய்துவைத்தார். நீதிபதி ஜாய்மல்யா பதவியேற்றதன் மூலம், சுப்ரீம் கோர்ட்டில் அனுமதிக்கப்பட்ட 34 நீதிபதிகளில் 33 நீதிபதிகள் இருப்பார்கள்.

நீதிபதி ஜாய்மல்யா சுப்ரீம் கோர்ட்டில் ஆறு ஆண்டுகளுக்கும் மேலாகப் பதவி வகிப்பார், அந்த காலத்தில் அவர் தலைமை நீதிபதியாகவும் பணியாற்றுவார். 1966 அக்டோபரில் பிறந்த நீதிபதி ஜாய்மல்யா, 2031 மே 25ல் நீதிபதி கே.வி. விஸ்வநாதன் ஓய்வு பெற்றவுடன் தலைமை நீதிபதி பதவியை ஏற்றுக் கொள்வார். அவரது பதவிக் காலம் அக்டோபர் 2, 2031 அன்று ஓய்வு பெறும் வரை நீடிக்கும்.



மார்ச் 6 அன்று தலைமை நீதிபதி கண்ணா தலைமையிலான ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட கொலீஜியம் அவரது பெயரைப் பரிந்துரைத்த சில நாள்களுக்குப் பிறகு, மார்ச் 10ல் மத்திய அரசு நீதிபதி ஜாய்மல்யா பாக்சியின் பெயர் சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக நியமிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

நீதிபதி பி.ஆர். கவாய், நீதிபதி சூர்யா காந்த், நீதிபதி அபய் எஸ். ஓகா மற்றும் நீதிபதி விக்ரம் நாத் ஆகியோரைக் கொண்ட கொலீஜியம், ஜூலை 18, 2013 அன்று நீதிபதி அல்தாமஸ் கபீர் ஓய்வு பெற்றதிலிருந்து எந்த கொல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதியும் தலைமை நீதிபதியாக உயர்த்தப்படவில்லை.

நீதிபதி பாக்சி ஜூன் 27, 2011 அன்று கொல்கத்தா உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக நியமிக்கப்பட்டு ஜனவரி 4, 2021 அன்று ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டார். அவர் 2021 நவம்பர் 8ல் மீண்டும் கொல்கத்தா உயர் நீதிமன்றத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டார், அன்றிலிருந்து அங்கேயே பணியாற்றி வருகிறார். 13 ஆண்டுகளுக்கும் மேலாக உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றிய அவர், தலைமை நீதிபதிகள் உள்பட உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஒருங்கிணைந்த அகில இந்திய மூத்த நீதிபதிகளின் பட்டியலில் 11-வது இடத்தில் உள்ளார். தனது நீண்ட பணிக் காலத்தில், நீதிபதி ஜாய்மல்யா பாக்சி பல்வேறு சட்டத் துறைகளில் குறிப்பிடத்தக்க அனுபவத்தைப் பெற்றுள்ளார்.

# பிரதமர் மோடி-நியூசி. பிரதமர் சந்திப்பு

டெல்லி, மார்ச் 18-

பிரதமர் மோடியுடனான சந்திப்பின்போது இருநாட்டு உறவு உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து கிறிஸ்டோபர் லக்சன் ஆலோசனை நடத்தினார்.

5 நாட்கள் அரசு முறைப் பயணமாக நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் நேற்று இந்தியா வந்தார். டெல்லி விமான நிலையம் வந்த அவரை உயர்மட்ட குழுவினர் வரவேற்றனர். இந்நிலையில், இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, பிரதமர் மோடியை நேற்றுமுன்தினம் நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் சந்தித்தார். பிரதமர் மோடியுடனான சந்திப்பின்போது இருநாட்டு உறவு உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து கிறிஸ்டோபர் லக்சன் ஆலோசனை நடத்தினார். இதன்பின்னர், இருநாட்டு தலைவர்கள் முன்னிலையில் இந்தியா, நியூசிலாந்து இடையே வர்த்தகம், பாதுகாப்பு, கல்வி, வேளாண்மை உள்பட பல்வேறு துறைகளில் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

## பா.ஜ.க. அமலாக்கத்துறையை கருவியாக பயன்படுத்துகிறது:

# எங்கள் மடியில் கனம் இல்லை, அதனால் வழியில் பயம் இல்லை: அமைச்சர் ரகுபதி

சென்னை, மார்ச் 18-

எங்கள் மடியில் கனம் இல்லை, அதனால் வழியில் பயம் இல்லை. என அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் அரசு மதுக்கடைகளை நடத்தும் டாஸ்மாக் நிறுவனத்திலும், மது ஆலைகளிலும் நடத்தப்பட்ட சோதனைகளில் ரூ.1,000 கோடி அளவுக்கு ஊழல் உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக அமலாக்கத்துறை குற்றம்சாட்டியுள்ளது.

இந்நிலையில், இது குறித்து செய்தியாளர்களிடம் அமைச்சர் ரகுபதி கூறியதாவது;-

மாற்றுக் கட்சிகள் ஆட்சி நடத்தும் மாநிலங்களில் அமலாக்கத்துறை, வருமானவரித் துறையை ஏவி பா.ஜ.க. அரசு பழிவாங்குகிறது. அமலாக்கத் துறையை ஒரு கருவியாக பா.ஜ.க. பயன்படுத்துகிறது.

அமலாக்கத்துறை சோதனை நடத்தி இத்தனை நாட்களாகியும், இதுவரை ரூ.1,000 முறைகேடு நடந்ததாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பான எந்த ஆதாரத்தையும் அவர்கள் வெளியிடவில்லை. இந்த குற்றச்சாட்டுகளை அமைச்சர் செந்தில் பாலாஜி தெளிவாக மறுத்துள்ளார்.

டெல்லி பாணியில் தமிழகத்தில் அரசியல் செய்துவிடலாம் என பா.ஜ.க. கனவு கண்டு கொண்டிருக்கிறது. தமிழக மக்கள் விழிப்புணர்வு மிக்கவர்கள். எனவே, இங்கு பா.ஜ.க.வின் பாய்ச்சல் செல்லுபடி ஆகாது. நமது பிள்ளைகளின் கல்விக்காக ஒதுக்கப்பட்ட நிதியை, இந்தி திணிப்பை வலியுறுத்தி பா.ஜ.க. அரசு நமக்கு தர மறுக்கிறது.

இதையெல்லாம் கண்டித்து தமிழ்நாட்டில் இருக்கும் பா.ஜ.க., தமிழக மக்களின் நலனுக்காக போராட தயாராக இருக்கிறதா?

அமலாக்கத்துறையை பழிவாங்கும் செயல்களுக்காக பயன்படுத்துகிறார்களே தவிர, அவர்களால் எந்த குற்றச்சாட்டும் கூற முடியாது. எங்கள் மடியில் கனம் இல்லை, அதனால் வழியில் பயம் இல்லை. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் எந்த தவறுக்கும் இடம் கொடுக்க மாட்டார்."

இவ்வாறு அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்.